# மோனிஷா



ராஜேஷ்குமார்

திகில் நாவல் - 1



# 1



அந்தத் தனியார் மருத்துவமனையி அவுட் பேஷண்ட் வார்டு.

ஏராளமான கூட்டம் இருந்தது. ட்ரஸ்ட்டி மூலமாக நடத்தப்படும் இலவச மருத்துவ பிரிவு அது.

டாக்டரின் அறையிலிருந்து ஊசி மருந்த சீட்டோடு வெளிப்படுபவர்கள் க்யூவி நின்றிருக்க - நர்ஸ் மோனிஷா சுறுசுறுப்பா இயங்கிக் கொண்டிருந்தாள்.

சிரிஞ்சை ஹீட்டர் தண்ணீரில் ஸ்டெ லைஸ் செய்வதும் - மருந்துச் சீட்டைப் பார்த் மருந்தை நிரப்புவதும் - நோயாளியி புஜத்தில் பஞ்சைத் தேய்த்து ஊசியை சொருகுவதுமாக வேககதியில் பணியாற் கொண்டிருந்தாள்.

இலவம் பஞ்சு நிற யுனிபார்மில் ஒ தேவதையைப் போல இருக்கும் மோனிஷ வின் முகத்தில் எந்நேரமும் ஒரு புன்னகை நிரந்தரமாய்க் குடியிருந்தது. சிடுசிடுக்கா அவளின் முகத்துக்காக அவளுடைய ட்யூட் டைம் விசாரித்து வைத்துக் கொண்டு அந் நேரத்தில் வந்து உடம்பைக் காட்டி விட்டு போவார்கள் ரெகுலர் பேஷண்ட்டுகள்.

க்யூ மெதுவாய் நகர்ந்தது.

பொன்னம்மா என்று அடிக்கோடிட பட்டிருந்த அந்த மஞ்சள் நிற சீட்டை பார்த்ததும் - சிரிஞ்சில் மருந்தை நிரப்பி கொண்டே நிமிர்ந்தாள்.



''என்ன பொன்னம்மா... இப்போ வயத்து வலி எப்படி இருக்கு?''

''தேவலாம்மா... இன்னும் ரெண்டு ஊசி மட்டும் போட்டாப் போதும்ன்னு டாக்டரய்யா சொல்லிட்டாரு...''

''உன்னோட புருஷன் மறுபடியும் சாராயக் கடைப் பக்கம் போனானா...?''

''இல்லைம்மா.... அன்னிக்கு நீ மணிக்கணக்கா பேசினதெல்லாம் அந்த ஆள் காதுல நல்லா ஏறி இருக்கும் போலிருக்கு... ஒரு வாரமா சாராயக்கடைப் பக்கமே போகலை... இருந்தாலும் வேதாளம் எப்போ முருங்கை மரத்து மேலே ஏறும்ன்னு எனக்குத் தெரியலை...''

''அப்படி அந்த வேதாளம் முருங்கை மரத்து மேல ஏறிச்சுன்னு வை... உடனே என்கிட்டே வந்து சொல்லு... நான் வேப்பிலை அடிச்சு அனுப்பி வெக்கறேன்... பெண்டாட்டி உடம்பை விட சாராயக்கடை முக்கியமா இருந்தா எப்படி அந்த ஆள் கூட பொழப்பு ஒட்டத்த முடியும்...?''

சிரிஞ்சை அவள் புஜத்திலிருந்து வெளியே எடுத்து ஊசி போட்ட இடத்தில் பஞ்சை வைத்து அழுத்தினாள்.

''நல்லா தேய்ச்சி விட்டுக்கோ...''

பொன்னம்மா இரண்டு கைகளையும் எடுத்துக் கூப்பினாள்.

''நான் வரேம்மா...''

க்யூ வரிசையின் அடுத்த நபர் முன்னால் வந்தார். பேச்சியப்பன்.

தாடை பூராவும் வெள்ளை முட்களாய் தாடி பயிராகியிருக்க அந்த அறுபத்தைந்து

வயதுப் பெரியவர் ஒன்றிரண்டு பற்கள் உதிர்ந்த வாயால் புன்னகைத்தார்.

"என்ன பெரியவரே... மறுபடியும் நெஞ்சு வலியா...?"

"ஆமாம்மா..."

"இந்த வயசுல அடிக்கடி டென்ஷன் ஆகாதீங்க... ரிலாக்ஸா இருங்க... இப்போ நான் போடற ஊசி மருந்தை விட அதுதான் உங்களுக்கு சிறந்த மருந்து..."

பெரியவர் விரக்தியாய் புன்னகைத்தார்.

"டென்ஷன் ஆகக்கூடாது.... ரிலாக்ஸா இருக்கணும்.... இப்படித்தான் நான் நினைக்கிறேன். உன்னை மாதிரி பொறுமைசாலியாகவும்... சிரித்த முகத்தோடவும் ஒரு மருமக இருந்தா அதெல்லாம் சாத்தியம்.... ராட்சஸி மாதிரி மருமகள் எனக்கு வாய்ச்சிருக்கா. அவளோட குத்தல் பேச்சுக்களையும் கடுகடு மூஞ்சியையும் பார்த்தா டென்ஷன் ஆகாம இருக்க முடியாது..."

"மருமக சொல்றதை ஒரு பொருட்டா எடுத்துக்கிட்டாத்தானே டென்ஷன்... இந்த காதில் வாங்கி அந்த காதில் விட்டுடுங்க. இன்னொரு தடவை நெஞ்சு வலி வந்தா உங்க உடம்பு தாங்காது..."

ஊசி போட்ட புஜத்தை தேய்த்துவிட்டுக் கொண்டபடியே அவர் வறட்சியாய்ச் சிரித்தார். "அதைத்தாம்மா நான் எதிர் பார்த்துட்டிருக்கேன்... போய்ச் சேர்ந்துட்டாப் போதும்னு இருக்கு..."

திகைப்போடு அவரைப் பார்த்தபடியே மோனிஷா நின்றிருந்தபோது அடுத்த ஆள் சீட்டை நீட்டினான்.



இளஞ்சிவப்பு நிறத்திலிருந்து அந்த சீட்டைப் பார்த்ததும் மோனிஷாவின் கண்களுக்குள் திகைப்பு வட்டமிட்டது.

இது ஆஸ்பத்திரி சீட்டு இல்லையே?

யோசித்துக் கொண்டே - டாக்டர் கிறுக்கி இருக்கும் ப்ரிஸ் க்ரிப்ஷன் எழுத்துக்களை உற்றுப் பார்த்துப் படிக்க முயன்றவளை ஒரு திடுக்கிடல் அள்ளியது.

மோனிஷா ஐ லவ் யூ...!

இப்படித்தான் சீட்டில் எழுதியிருந்தது.

விருட்டென்று கோபம் நெஞ்சை அடைக்க - சீட்டைக் கொடுத்த ஆசாமியை நிமிர்ந்து பார்த்தாள்.

அப்பாவியாய் முகத்தை வைத்தபடி அந்த இளைஞன் நின்றிருந்தான். இள நீல வர்ணத்தில் டீ சர்ட் அணிந்திருந்தான். பட்டை பட்டையாய்க் கறுப்பு எழுத்துக்கள் அந்த டீ சர்ட்டின் மேல் ஓடியிருந்தன. டீ சர்ட்டுக்குப் பொருத்தமான நிறத்தில் ஜீன்ஸ். கனமான போக் ஷூ.

அவனைப் பார்த்ததுமே - மோனிஷாவின் கோபம் தீயில் காட்டிய பாலிதீன் காகிதம் போல சட்டென்று பொசுங்கிப் போனது.

வெள்ளப் புகை மாதிரி அவள் நெஞ்சுக்குள் பரவ - அதை மறைத்துக் கொண்டு அவனை முறைத்தாள்.

"உங்க உடம்புக்கு என்ன...?"

அவன் மற்றவர்களுக்கு கேட்காத கிசுகிசுப்புக் குரலில் சொன்னான்.

"காதல் வியாதி..."

"ஊசி போடணுமா..."

''ப்ரிஸ்க்ரிப்ஷன்ல இருக்கற மருந்த இருந்தா போட்டுவிடு...''

''அதெல்லாம் இங்கே கிடைக்காது....''

''உன்கிட்டே மட்டும்தான் கிடைச் கும்ன்னு சொன்னாங்களே...?''

''யாரு...?''

''டாக்டர் மன்மதராஜன்... மீன் கொடி தேரில் கரும்பு வில்லோட வந்து ப்ரிஸ்க்ரிப் ஷன் எழுதிக் குடுத்துட்டுப் போனார்...''

''கிடைக்கும்... அப்படி ஓரமா உக்காந் திருங்க... அரை மணி நேரம் கழிச்ச பீச்சுக்கோ... பார்க்குக்கோ கூட்டிட்டுப் போய் ஹெவி டோசாய் தர்றேன்...''

''வித் ப்ளெஷர்! அரை மணி நேரம் என்ன.... அஞ்சு யுகமே வேணும்ன்னாலும் காத்திருக்கேன்...''

''போங்க போய் உக்காருங்க...''

அவன் கமுக்கமான சிரிப்போடு வராந்தா ஓர பெஞ்சுக்கு போக மோனிஷா நெக்ஸ்ட் என்றாள்.

காத்திருந்த சொற்ப நபர்களில் அடுத்த தாய் நின்றிருந்த ஆசாமி வந்தார்.

க்யூவின் நீளம் சுருங்கிக் கொண்டே வந்தது.

சரியாய் முப்பது நிமிஷங்களில் எல்லோருக்கும் இஞ்செக்ஷன் போட்டு முடித்திருந்தாள் மோனிஷா.

ட்யூட்டி நேரம் கடந்திருக்க - காத்திருந்த அந்த இளைஞனிடம் சொன்னாள்.

''அஞ்சு நிமிஷம் இருங்க... ட்ரஸ் சேஞ் பண்ணிட்டு வர்றேன்...''



''வித் ப்ளெஷர்.... அஞ்சு நிமிஷம் என்ன... அஞ்சு யுகமே வேணாலும்...''

காதுகளைப் பொத்திக் கொண்டாள் மோனிஷா.

''கடவுளே அறுக்காதீங்க... தாங்க முடியலை...''

வராந்தாவில் கேன்வாஸ் பாதங்கள் பதிய வேகமாய் நடந்து சென்றவள் - மறுகோடியில் இருந்த ஒரு அறைக்குள் நுழைந்தாள்.

கொஞ்ச நேரத்தில் வெள்ளை நிறப் பின்னணியில் ஆரஞ்சு நிறப் பூக்கள் பூத்திருந்த காட்டன் புடவையில் வெளிப் பட்டாள். யூனிபார்ம் பிதுங்கும் ஹேண்ட் பேகைத் தோளுக்குக் கொடுத்திருந்தாள்.

அவனை நெருங்கியதும் சொன்னாள்.

''ம்.... போகலாம் தாமோதர்...''

அந்த தாமோதர் எழுந்தான்.

கையில் கீ செயின் சுழல அவளோடு நடந்தான். நீள வராந்தா முடிந்ததும் கண்ணாடிக் கதவை தள்ளி ரிசப்ஷனில் பிரவேசித்து படிகளில் கீறேங்கினார்கள்.

ஆஸ்பத்திரியின் இடது புறம் இருந்த கார் பார்க்கிங்கைத் தொட்டு வரிசை வகுத்திருந்த கார்களுக்கு இடையே நின்றிருந்த கருப்பு நிற பல் ஆஸ்ட்ராவை ரிவர்ஸ் கியர் போட்டு வெளியே எடுத்தான்.

டிரைவிங் இருக்கையில் இருந்த தாமோதர் பேட்டில் முழங்கையை ஒன்றி இடது புறக் கதவைத் திறந்து விட்டான்.

''உக்காரு மோனிஷா...''

அவள் அமர்ந்ததும் கியரை மாற்றி ஆக்ஸிலேட்டரை மிதித்தான்.

கார் ஐஸ் கட்டியின் மேல் வழுக்குவதை போல சாலையில் விரைந்தது.

சொற்ப நிமிஷங்களில் பீச் ரோட்டை தொட்டார்கள்.

லைட் ஹவுஸ் அருகே யு டர்ன் அடித்து பீச் மணலை ஒட்டியிருந்த பேவ்மென்டுக்கு காரைச் செலுத்தினான்.

காந்தி சிலைக்கு அப்பால் சென்று இயக்கத்தைத் தொலைத்தது காரின் எஞ்சின்.

மோனிஷாவைத் திரும்பிப் பார்த்தான் தாமோதர்.

''இப்படியே காருக்குள்ளேயே உக்காந்து பேசலாமா... இல்லை.... அப்படி மணலுக்கு போயிடலாமா....?''

மோனிஷா சலனமில்லாத குரலில் சொன்னாள்.

''உக்காந்து பேசற இடம் முக்கியம் இல்லை... பேசற விஷயம்தான் முக்கியம்...''

''என்ன நீ ரொம்ப சீரியசாயிட்ட மாதிரி தெரியுது...?''

''ஆமா... நீங்க சீரியஸ் ஆகணும்னு நினைக்கிறேன்...''

''நானும் சீரியசாகணுமா...?''

''ஆஸ்பத்திரிக்கு வந்து அத்தனை பேர் முன்னால் உங்க குறும்புத்தனத்தை காட்டறீங்களே...?''

''அதுதான் நீ சீரியசானதுக்கு காரணமா?''

''அது மட்டுமில்லை...''

''பீச், பார்க் ரெஸ்டாரண்டுன்னு போரடிச்சுப் போச்சு...''



''அடுத்த கட்டம்ன்னா...?''

''கல்யாணம்தான்...''

''இவ்வளவுதானே...?'' பண்ணிக்கிட்டாப் பாச்சு...''

''என்னவோ காபி குடிக்கிற மாதிரி... டிபன் சாப்பிடற மாதிரி அலட்சியமா சொல்றீங்களே...? காதலிக்கிறது சுலபம்... கல்யாணம் பண்ணிக்கிறது அவ்வளவு சுலபம் இல்லை.''

''அதிலென்ன கஷ்டம்? நான் நல்லா முடிச்சுப் போடுவேன் மோனிஷா... மஞ்சள் கயத்துல மூணே மூணு முடிச்சுப் போடணும்... அவ்வளவுதானே...?''

''ஆர் யூ ஜோக்கிங்...? எனக்கு சிரிப்பே வரலை.... நான் சீரியஸா பேசிட்டிருக்கேன்...''

''நானும் சீரியஸாதான் பேசறேன் மோனிஷா...''

''எனக்கு ரொம்பக் கவலையா இருக்கு தாமோதர்...''

''என்ன கவலை...''

''போன வருஷம் அம்மா இறந்ததுக்கப்புறம் எனக்குன்னு இப்போ பெரியவங்க யாருமே இல்லை.... என்னோட சம்பாத்தியத்தைக் கணக்கில் எடுத்துக்கிட்டா என்னை லோயர் மிடில் கிளாஸ்ன்னு சொல்லலாம்... ஆனா நீங்க ஓபல் அஸ்ட்ரா... டாட்டா சியார்ரா... வாயேஜர்ன்னு வேளைக்கு ஒரு கார்ல பவனி வர்ற பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்... நம்ம காதல் கல்யாணத்தில் முடியுமான்னு எனக்கு இப்போ பயமா இருக்கு தாமோதர்...''

''இத்தனை நாளா இல்லாம இப்போ திடீர்ன்னு ஏன் இந்த பயம் மோனிஷா...?''

''நான் உணர்ச்சி வேகத்தில் எதை
பத்தியும் யோசிக்காம உங்க கூட ப
ஆரம்பிச்சிட்டேன்... சமீப காலமா சில பேப்
செய்திகளைப் பார்க்கிறப்போ மனசுக்குள்
பயம் அமீபா மாதிரி அரிச்சிட்டே இருக்கு...''

''அப்படி என்ன பேப்பர் செய்தியை
பார்த்தே...?''

''பெற்றோர் சம்மதிக்காததால ம
முடைந்து காதல் ஜோடி தற்கொலை
இப்படிப்பட்ட செய்திகள் பேப்பர்ல நிறை
வருது தாமோதர்...''

அவன் சிரித்தான்.

''பெற்றோர் சம்மதித்து காதல் ஜோ
திருமணம்ன்னு எந்த நியூஸ் பேப்பரில
செய்தி வரவே வராது மோனிஷா... நியூ
பேப்பர்ல வர்றதெல்லாம் சம்பவங்க
இல்லை.... அசம்பாவிதங்கள்... பத்
சம்பவங்கள்ல ஒரு சம்பவம் முரண்பா
நடந்தா அதுதான் அசம்பாவிதம்... பேப்ப
காரங்க அசம்பாவிதங்களைத்தான் பெ
படுத்திப் போடுவாங்க... காதலுக்குப் பச்சை
க்ம்பளம் விரிக்கிற பெற்றோர் எவ்வளவோ பே
இருக்காங்க... அதெல்லாம் செய்தியா வராது
அப்படியே வந்தாலும் அது படிக்
சுவாரஸ்யமா இருக்காது...''

''உங்க அப்பாவும் அம்மாவும் என்னை
ஏத்துக்குவாங்களா தாமோதர்...?''

''கண்டிப்பா ஏத்துக்குவாங்க... இதுதா
உன்னோட கவலைன்னா நாளைக்கே நா
உன்னோட கவலையைத் தீர்த்
வெக்கறேன்...''

''ரியலி...?''

''நிஜம்மா...! நாளைக்கு சாயந்தயம்
ட்யூட்டி முடிஞ்சதும் உன்னை ஹா



ட்டல்ல வந்து பிக்கப் பண்ணிக்கறேன்...
ம ரெண்டு பேரும் நேரா எங்க வீட்டுக்குப்
பாகலாம்...''

''அப்படின்னா இன்னிக்கே உங்க அப்பா
ம்மா கிட்டே இதைப் பத்தி பேசிடறீங்
ளா...?''

தாமோதர் சிரித்துக் கொண்டே மறுத்தான்.

''நோ... நோ... நாளைக்கு நான் உன்னை
ன்னோட அப்பா அம்மாவுக்கு ஸர்ப்பரைஸா
றிமுகப்படுத்தி வெக்கப் போறேன்...''



# 2



நீலநிறத்தில் ரயில்வே யூனிபார்ம்
ணிந்திருந்த ராஜூ - ட்ராக்மெயின்ட்ட
ன்ஸ் டிவிஷன் - என்று ஆங்கில
ழத்துக்கள் செதுக்கிய பேட்ச் அணிந்
ருந்தான்.

முரட்டு லெதர் ஷூக்கள் சப்திக்க -
பர்வைஸரின் அறைக்குள் நுழைந்தான்.

முகத்தில் கோபம் தகிக்க - வழுக்கைத்
லை சூபர்வைஸரைப் பார்த்துக் கேட்டான்.

''கூப்பிட்டிங்களா ஸார்...''

''ஆமா...''

''ஏழு மணியோட எனக்கு ட்யூட்டி
டியுது... கை கழுவிட்டு இருக்கறப்போ நீங்க
ப்பிட்டதா தகவல் சொன்னாங்க...''

''நீ இன்னிக்கு ஒரு மணி நேரம் ஓவர்
ம் பார்க்கணும் ராஜூ...''

''ஸாரி ஸார்.... என்னால முடியாது... நீ மாணிக்கத்தையோ... கோபாலை கூப்பிட்டு ஓவர் டயம் குடுங்க...''

''அவங்களுக்கு ஓவர் ட குடுக்கறதைப் பத்தி நீ எனக்கு சொ வேண்டிய அவசியம் இல்லை...''

''பின்னே என்ன ஸார்...? எப்போ ஓ டயம் வேலை இருந்தாலும் உங்களுக் நான்தான் கிடைப்பேனா...''

''இங்கே பாரு ராஜு.... ஓவர் டய ட்யூட்டிக்கு மாத்திரம் நான் உன் பேரை போடறதில்லை.... போன வாரம் ப் மோஷன் யாருக்குத் தரலாம்ன்னு ரெக்கமண் பண்ணச் சொல்லி மேலிடத்திலிரு கேட்டிருந்தாங்க... லிஸ்ட்ல கோப பேரையோ மாணிக்கத்தின் பேரையோ ந போடலை... உன்னோட பேரைத்தான் சிபா செஞ்சிருக்கேன்...''

சூபர்வைஸர் சொன்னதும் - அடிபட்டவ போல ஆனான் ராஜு.

''இப்போ நான் என்ன செய்யணும் சொல்லுங்க ஸார்...''

''குட்... இதுதான் ஒரிஜினல் ராஜுவோ கேள்வி.... மத்தவங்க பேச்சைக் கேட் எப்பவுமே நீ உன்னைக் குழப்பிக்காதே... உ மனசுக்கு சரின்னு தோணினதை செஞ்சிட்டிருந்தா மளமளன்னு நீ மே வரலாம்...''

''ப்ரொமோஷன்ங்கற வார்த்தையை சொல்லிட்டிங்க... ஓவர் டயம் இருந்த நா என்ன வேலை பார்க்கணும்ன்னு சொ லுங்க...''



''நார்த் ஜோன்ஸ் ரெண்டு கிலோ மீட்டர் ...ேத்துக்கு ட்ராக்கை செக் பண்ணிட்டு ...ணும்... மாணிக்கத்தையும் கோபாலையும் ...ட்டு உனக்கு மட்டும் வேலை ...றன்னு நினைக்காதே... அவங்களும்தான் ...ர் டயம் பார்க்கறாங்க... இது எமர்ஜன்சி ...க்.... எல்லாருமே கட்டாயமா இருந்து ...ட்டி பார்த்து ஆகணும்...''

ராஜு ஆச்சர்யத்தோடு கேட்டான்.

''நார்த் ஜோன் ட்ராக் பூராவுமே ...யின்ட்டனன்ஸ் ரொட்டீன்ல ஏற்கெனவே ...ந்துடுச்சே... போன வாரம்தானே பார்த்து ...டிச்சோம்...''

''வர்ற ஆகஸ்ட் பதினைஞ்சாம் தேதி சதி ...க்கப் போறதா டிபார்ட்மெண்ட்டுக்கு நியூஸ் ...ந்திருக்கு... நக்ஸலைட்ஸ் ட்ராக்கில் ...ாவது சில்மிஷம் பண்ணி ட்ரெயில் ...ன்னத் திட்டம் தீட்டியிருக்காங்க... ...தனால ஓவர் டயம் ட்யூட்டிங்கற அலட்சியத் ...ாட இருக்க வேண்டாம்... உனக்குக் ...காடுக்கப்பட்ட ரெண்டு கிலோ மீட்டர் ...ராக்கை கவனமா பார்த்து செக் பண்ணிட்டு ... ராஜு...''

தலையாட்டி விட்டு சூபர்வைஸரின் ...றையிலிருந்து வெளியே வந்தான் ராஜு.

டூல்ஸ் ரூமுக்குப் போய் ஸ்பானர் கிட், ...ர்ச் லைட், நீளக் கழி ஆகியவற்றை எடுத்துக் ...காண்டான்.

சுற்றுப்புறத்தை தொண்ணூறு சதவீத ...ருட்டு கவ்வியிருந்தது.

டார்ச் லைட்டின் மஞ்சள் ஒளி வட்டத்தை ...ன்னால் படரவிட்டபடியே - தண்ட ...ாளத்தருகே நடந்தான் ராஜு.

சந்தேகப்படும்படியான இடத்தில் ட்ர போல்ட்டை ஸ்பானரால் திருகிப் பார்த்து ஒ பண்ணிக் கொண்டே நடந்தான்.

அரை கிலோ மீட்டர் தூ நடந்திருப்பான்.

இரண்டு புறமும் முட்செடிகள் பட திருக்க - தண்டவாளம் நடுவே ஓடி கொண்டிருந்தது. தூரத்தில் ஒற்றை புள்ளியாய் எரிந்து கொண்டிருந்த சிவப் சிக்னல் இந்த நிமிஷம் பச்சைக்கு மா இருந்தது.

மணிக்கட்டில் இருந்த வாட்சில் ரேடிய பச்சையோடு நகரும் முட்களைப் பார்த்தான்.

சபர்பன் ட்ரெயின் வர்ற நேரம்....

தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே ட்ராக்கை விட்டு சற்றே ஒதுங்கி நடந் சென்றான்.

சில் வண்டுகள் கருங்கற்களை ஒன்றோடு ஒன்று உரசுவதைப்போல காதை அறுக்கி மாதிரி சப்தமிட்டுக் கொண்டிருந்தன.

டார்ச் லைட்டின் வெளிச்சத் தூண் பத்த முன்னால் அசைந்து சென்று கொண்டிருக்க.

அந்த திடீர் விநாடியில் -

தட்டென்று நடையை நிறுத்தினா ராஜு.

டார்ச்சின் வெளிச்ச வட்டம் அப்படியே நின்றது.

தண்டவாளத்தில் தலையைக் கொடுத் ஒரு இளம்பெண் குப்புறப்படுத்திருந்தாள்.

சபர்பன் ட்ரெய்ன் வர்ற நேரம்.



பச்சை சிக்னல் அவனுக்குள் உஷார் தைத்தைப் பாய விட - கத்திக் கொண்டே ந்தப் பெண்ணின் அருகே ஓடினான்.

"ஏய், பொண்ணு.... எந்திரி மொதல்ல.... ரெய்ன் வரப் போகுது... பீஸ் பீஸாப் பாயிடுவே..."

அந்தப் பெண் சலனமில்லாமல் டுத்திருந்தாள்.

தொலைவில் ரயிலின் ஹெட்லைட் ரகாசமாய் உதித்தது?

"ப்ரான்க்க்க்"

தண்டவாளத்தை ஆவேசமாய் விழுங்கிய வேகமாய் வந்து கொண்டிருந்தது லக்ட்ரிக் ட்ரெயின்.

ராஜு பரபரப்பானான்.

ஓடிச்சென்று அவளைத் தோளைத் தொட்டுத் தூக்கி புரட்டிப் போட்டான்.

தண்டவாளத்தை விட்டு அவள் சுகவாட்டில் விழவும் - ரயில் ஏராளமான இரைச்சலோடு அந்தப் பகுதியை கடந்து செல்லவும் சரியாக இருந்தது.

கடைசியாக இருந்த கார்டு பெட்டி ஈச்சிட்டுக் கொண்டே சென்றதும் - மறுப்புறத்தை மீண்டும் இருட்டு கவ்விக் காண்டது.

அப்போதுதான் ராஜு அந்த வித்தி ாசத்தை உணர்ந்தான்.

இவ்வளவு நடந்தும் அந்தப் பெண்ணிடம் ன்ன அசைவு கூட இல்லை.

எதிர்ப்புக் குரல் இல்லை.

கவலையோடும் - படபடப்போடும் டார்ச் வெளிச்சத்தை அவள் மேல் பரப்பினான்.

அதிர்ந்து போனான்.

அவளின் முகம் முழுவதுமாய் சிதைந் போயிருந்தது. மார்பெல்லாம் ரத்த மய உடம்பில் ஒரு பொட்டுத் துணிகூ இல்லாமல் கிடந்த அவள் நூறு சதவீத செத்துப் போயிருந்தாள்.



3



**ஹா**ஸ்பிட்டல் கட்டிடத்தை விட் வெளியே வந்தாள் மோனிஷா.

''பாம்ப்...''

கார் பார்க்கிங் பகுதியிலிருந்து ஹார சத்தம் வந்தது. அவளுக்குப் பழக்கமா ஹார்ன் ஓசை.

திரும்பி பார்த்தாள்.

காரின் ஜன்னல் சதுரத்தில் புன்ன யோடு தாமோதரின் முகம் தெரிந்தது.

''ஹாய் மோனிஷா...''

காரை நெருங்கி வந்து. ''ஹாய்... சொன்னாள் மோனிஷா.

அவளை வியப்போடு மேலிருந்து கீ பார்த்தான்.

''அற்புதமா இருக்கு மோனிஷா....''

''என்ன அற்புதம்...?''

''ஷாம்பு போட்ட பளபள கூந்தல்...''

''அப்புறம்...?''



''உன்னோட தங்க நிற உடம்புக்கு மேட்சா நீ போட்டிருக்கற இந்த ரோஜா வர்ண வழு வழு புடவை...''

''அப்புறம்...?''

''தேர் அசைஞ்சு வர்ற மாதிரி இருக்கிற உன்னோட நடை....''

''ம்... மேலே சொல்லுங்க திடீர் கவிஞரே...''

''சிம்ப்ளி சூபர்ப்....''

''பல நாள் நான் இதே மாதிரி ட்ரஸ் பண்ணி இருக்கேனே... இன்னிக்கு என்னவோ புதுசா பார்க்கிற மாதிரி மெல்ட் ஆகிப் போயிட்டிங்களே...''

''வழக்கமாகவே அசத்தல்தான்... இன்னிக்கு என்னவோ அசத்தலோ அசத்தல்... ஒரு ஸ்பெஷல் டச் இன்னிக்கு உன்கிட்டே தெரியுது...''

''தெரியுதா... ரியலி...?''

''நிஜம்மா...''

''ஸ்பெஷல் டச் என்னோட புடவைதான்... நேத்திக்கு ரெண்டு மணி நேரம் செலவு பண்ணி நான் செலக்ட் பண்ணின புடவை...''

''நேத்திக்குப் போய் எடுத்தியா...?''

''ஆமா என்னோட வருங்கால மாமனாரையும்... மாமியாரையும் முதல் முதலா பார்க்கப் போறேன்... முதல் பார்வையிலே அவங்களுக்கு என்னைப் பிடிக்க வேண்டாமா.. அதனாலதான் சிம்ப்பிளா அதேசமயத்தில் டீசண்டான லுக் தர்ற மாதிரி ஒரு புடவை டிசைனை ரெண்டு மணி நேரம் பாடுபட்டு தேர்ந்து எடுத்தேன்...''

தாமோதர் புன்னகைத்துக் கொண்டே காரை சாலையில் வழுக்க விட்டான்.

''நீ ரெண்டு மணி நேரம் செலவழிச்சது வீண் போகலை... இந்த ட்ரஸ்சில் உன்னைப் பார்க்கறப்போ நிஜமாவே அப்பீலிங்கா இருக்கு...''

''தாங்க்ஸ் தாமோதர்... உங்க அம்மா அப்பா காதில் விஷயத்தைப் போட்டு வெச்சிங்களா...?''

''ஊஹும்...''

''தாமோதர்...?''

''நான்தான் நேத்தே சொன்னேனே... திடீர்னு அவங்க முன்னால உன்னைக் கொண்டு போய் நிறுத்தினால்தான் த்ரில்...''

''எனக்கு நெஞ்சுக்குள்ளே ஒரே படபடப்பா இருக்கு...''

''ஏன்...''

''ஏதாவது எதிர்பாராதவிதமா நடந்துவிடக் கூடாதேன்னு படபடப்பு..''

''எதிர்பாராததுன்னா...''

''ஸர்ப்ரைஸா இருக்கட்டுமேன்னு திடீர்னு அவங்க கிட்டே நீங்க என்னை அறிமுகப் படுத்த... அவங்களுக்கு அது ப்ளெசன்ட் ஸர்ப்ரைஸா இருந்தா பரவாயில்லை... ஷாக்கிங் ஸர்ப்ரைஸா இருந்தா நிலைமை மோசமாயிடுமே...? அவங்க கிட்டே முன்கூட்டியே சொல்லி வையுங்கன்னு அதனாலதான் நான் உங்க கிட்டே திரும்பத் திரும்ப வலியுறுத்தி சொல்லிட்டிருந்தேன்...''

''என்னோட விருப்பத்தை அவங்க மதிப்பாங்க மோனிஷா...''



''மத்த விஷயம்னா ஓக்கே... கல்யாணங்கறது ரொம்ப சென்ஸிடிவான மேட்டர்... இதில் அவங்களுக்கும் ஆசா பாசங்கள் இருக்கும்...''

''அந்த ஆசாபாசத்துக்காக நம்ம காதலைக் காத்துல பறக்க விட முடியுமா...? நெவர்...''

''நான் அப்படிச் சொல்லலை... ஒருக்கால் அவங்களுக்கு மாறுபட்ட கருத்து இருந்தா கொஞ்சம் டயமெடுத்து அவங்களை கன்வின்ஸ் பண்ணிட்டு அப்புறமா என்னை நேரில் கூட்டிட்டுப் போகலாம்... எடுத்த எடுப்பிலேயே ஹார்ஷா பேசிட்டா அதுக்கப் புறம் ஒரு பனித்திரை விழுந்த மாதிரி ஆயிடும்...''

''என்னோட அப்பாவும் சரி... அம்மாவும் சரி... ஹார்ஷா பேசவே மாட்டாங்க...''

''நான்தான் ஸப்போஸ்ங்கற வார்த்தையைச் சொல்றேன்... இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகலை... ஒண்ணு செய்வோம்...''

''என்ன...?''

''எப்பவும் போல கொஞ்ச நேரம் பேசிட்டிருந்துடு வீட்டுக்குத் திரும்பிப் போயிடுவோம்... நீங்க மெல்லமா இந்த வாரத்தில் ஒரு நாள் உங்க வீட்டில் விஷயத்தை உடைச்சிடுங்க... பொண்ணக் கூட்டிட்டு வான்னு சொல்றப்போ என்னைக் கூட்டிட்டுப் போய் அறிமுகப்படுத்தி வையுங்க...''

தாமோதர் அந்தத் திருப்பத்தில் ஸ்டியரிங்கை வளைத்துக் கொண்டே - மோனிஷாவைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''முன் வெச்ச காலை பின் வெக்கற பழக்கம் எனக்கில்லை... இன்னிக்கு உன்னை என்னோட அப்பா அம்மா கிட்டே அறிமுகப்

படுத்தி வெக்கறதுங்கறது நேத்திக்கே நான் தீர்மானம் பண்ணின விஷயம்... டென்ஷன் ஆகாதே... ரிலாக்ஸா வா... அவங்க ஒண்ணும் உன்னைக் கடிச்சித் தின்னுட மாட்டாங்க..."

கார் பெஸண்ட் நகரின் ஆரம்பத்திலிருந்த அந்த பங்களாவிற்கருகே வேகம் குறைந்தது.

கனமான இரும்பு கேட்டுக்கருகே காரின் மூக்கை நிறுத்தி ஹார்ன் இசைத்தான்.

பாம்ப்.

பாம்ப்.

உள்ளுக்குள் எக்கோ எஃபக்ட்டுடன் அல்சேஷன்களின் குரல் கேட்டன.

தொடர்ந்து தாள்ப்பாள் விலக்கி கூர்க்கா ஒருவன் வேகமாகக் கதவைத் திறந்து விட்டான்.

கார் கப்பல் மாதிரி அசைந்து உள்ளே நுழைந்தபோது விறைப்பாய் நின்று சல்யூட் கொடுத்தான்.

சிமெண்ட் பேவ்மெண்டில் நூறடி தூரம் ஓடிய கார் போர்டிகோவில் போய்ப் புதைந்து நின்றது.

முகப்பு பூராவும் க்ரானைட்டால் இழைக்கப்பட்ட பிரம்மாண்டமான பங்களா. பங்களாவின் முன்புறம் பச்சை நிற வெல்வெட்டாய் வளர்க்கப்பட்ட புல்வெளி. ஒரு சிலைப் பெண்ணின் தலையில் இருந்து தூவானம் போல தண்ணீர் நாலா திசை களிலும் சிதறி புல்வெளியை நனைத்துக் கொண்டிருந்தது.

அங்கங்கே நட்டிருந்த அலங்காரக் கம்பங்களில் மெர்க்குரி விளக்குகள் அடர் நீலத்தில் பூத்திருந்தன.



பங்களாவின் பணக்காரத்தனத்தைப் பார்த்து அடிபட்டவள் போல ஆனாள் மோனிஷா.

தாமோதரின் உள்ளங்கையைப் பிடித்து அழுத்தினாள்.

"தாமோதர்..."

"ஏய்... மோனிஷா... என்ன உன்னோட கை இப்படி நடுங்கிட்டிருக்கு...?"

"பயமா இருக்கு..."

"பயப்படாதேன்னு நான் சொல்றேன்...' என்னோட அம்மாவும் அப்பாவும் எளிமையாப் பழகுவாங்கு மோனிஷா... அவங்களைப் பார்த்த பிறகு நீயே புரிஞ்சிப்பே..."

சொல்லிக் கொண்டே அவள் கண்களைப் பார்த்தவன் மேலும் திகைப்பை வாங்கினான்.

"ஏய்... என்ன இது...? எதுக்காக இப்போ கண்ணெல்லாம் கலங்கிப் போயிருக்கு...?"

"நீங்க பணக்காரர்ன்னு பழக ஆரம்பிச்ச கொஞ்ச நாளில் எனக்குத் தெரியும்... ஆனா இவ்வளவு பெரிய பணக்காரர்ன்னு எனக்குத் தெரியாது.... இந்தப் பணத்துக்காகத்தான் நான் உங்களைக் காதலிக்கிறேன்னு உங்க அம்மாவும், அப்பாவும் என்னைப் பத்தி சீப்பா எடை போட்டுடக் கூடாதே தாமோதர்..."

"டோன்ட் பி சில்லி... அப்படி யாரும் உன்னைச் சொல்ல மாட்டாங்க..."

"உங்க வார்த்தைகளை நம்பி நான் உள்ளே வரலாமா தாமோதர்...?"

"தைரியமா வா..."

போர்டிகோ படிகளைக் கடந்து பங்களா வின் மைய ஹாலுக்குள் பிரவேசம் ஆனார்கள்.

பாதங்களை அரை இஞ்சுக்கு உள்ளே வாங்கிக் கொள்ளும் மெரூன் வர்ண கம்பளம்.

ஒரிஜினல் இலவம்பஞ்சை விழுங்கி யிருந்த விலையுயர்ந்த சோபாக்கள். தேக்கு மரத்தில் செய்த வேலைப்பாடுகள் நிரம்பிய டீபாய். ஹாலின் நீள அகலங்களுக்கு ஈடு கொடுக்கிற விதமாய் மூலையில் ஒனிடா வைடு விஷன் டி.வி. சீலிங்கில் ராஜஸ்தான் ஹாண்ட்லியர் விளக்கு.

தாமோதர் அவளைப் பார்த்துப் புன்னகைத் தான்.

''உக்காரு மோனிஷா...''

பங்களாவின் பிரம்மாண்டத்தைப் பார்த்து பிரமித்துப் போய் நின்று கொண்டிருந்த மோனிஷா தாமோதரின் குரலால் கலைந்து போய்த் திரும்பிப் பார்த்தாள்.

''என்ன அப்படியே சிலை மாதிரி நின்னுட்டே... சோபாவில் உக்காரு... நான் அம்மாவையும், அப்பாவையும் கூட்டிட்டு வர்றேன்...''

சோபாவின் நுனியில் தன்னை அமர்த்திக் கொண்டாள் அவள்.

டேப்ரிக்கார்டர் சுவிட்சைத் தட்டிவிட்டு பக்கவாட்டு அறைக்குள் சென்றான் தாமோதர்.

மறைவிட ஸ்பீக்கர்களில் இருந்து இனிமையைத் தடவிக் கொண்டு கர்நாடக இசை புறப்பட்டு வந்தது.

ஐந்து நிமிஷம் கடந்திருக்கும்.

காலடி சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்தாள் மோனிஷா.

வெண்பட்டுப் புடவையை உடம்புக்குச் சுற்றியிருந்த அந்த நாற்பத்தைந்து வயதுப்



பெண்மணி வந்து கொண்டிருந்தாள். தாமோதரின் அம்மா சிவகாமி.

அவள் கூடவே தாமோதரும் வந்து கொண்டிருந்தான்.

''யாரோ கெஸ்ட் வந்திருக்கறதா சொன்னியே... இந்தப் பொண்ணுதானா...?''

கேட்டுக் கொண்டே அவள் சோபாவை நெருங்கியபோது - மோனிஷா சட்டென்று எழுந்து நின்று கையைக் கூப்பினாள்.

பதிலுக்குக் கை கூப்பின சிவகாமி அவளைக் கையமர்த்தினாள்.

''உட்காரும்மா...''

சிவகாமிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்ட தாமோதர் மெல்லிய குரலில் சொன்னான்.

''இவள் மோனிஷா...! மோனிஷா... இவங்கதான் என்னோட அம்மா சிவகாமி.... சமையல் கலைல எக்ஸ்பர்ட்... நீ ஒரு ஆறு மாசமாவது இந்த விஷயத்தில் என்னோட அம்மாகிட்டே ட்ரெயினிங் எடுத்துக்கணும்... அதுக்கப்புறம் நீ கட்டிகிட்டவனுக்கு காலம் பூராவும் வாய்க்கு ருசியா சமைச்சுப் போடலாம்...''

சிவகாமி அவனைப் பார்த்துப் புன்னகைத் தாள்.

''அவ கட்டிக்கப் போறவன் மேல உனக்கென்னடா அவ்வளவு அக்கறை...?''

''என்னம்மா இப்படிக் கேட்டுட்டே... அவளைக் கட்டிக்கப் போற ப்ரகஸ்பதி நான்தானே...?''

தாமோதர் சிரித்துக் கொண்டே சொல்ல - சிவகாமி சட்டென்று நிமிர்ந்தாள்.

அவசரக் குரலில் கேட்டாள்.

''என்னடா சொன்னே...?''

''இந்த மோனிஷாவைக் கல்யாணம் பண்ணிக்கப் போற அதிர்ஷ்டக் கட்டை நான்தான்னு சொன்னேன்...''

''நீ... நீ... என்ன சொல்றே...?''

''சுத்தமான தமிழில்தானே சொன்னேன்... இன்னும் கொஞ்சம் தெளிவா சொல்லணுமா...? உன்னோட வருங்கால மருமகள் இந்த மோனிஷா.... இவளை உனக்கு அறிமுகப்படுத்தி வெக்கத்தான் கூட்டிட்டு வந்திருக்கேன்...''

சிவகாமி கண்ணாடியைச் சரியாய்ப் பொருத்திக் கொண்டு மோனிஷாவைப் பார்க்க - அவள் எச்சில் விழுங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

விழிகள்' படபடக்க சிவகாமியையே வைத்த கண். வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இவளை உனக்கு பிடிசிருக்காம்மா...''

தாமோதர் ஆவலாய்க் கேட்க.

அவனுக்கு பதில் சொல்லாமல் சிவகாமியின் உதடுகள் மோனிஷாவைப் பார்த்து மெதுவாய் அசைந்தன.

''உன் பேர் என்ன சொன்னே...?''

''மோனிஷா...''

''என்ன பண்ணிட்டிருக்கே...? படிக்கிறியா...? வேலைக்குப் போறியா...?''

''வேலைக்குப் போறேன்...''

''என்ன வேலை...''



''நர்ஸா இருக்கேன்...''

''ஜி.ஹெச்சிலா...?''

''இல்லை... ஒரு ப்ரைவேட் ஹாஸ்பிட்டல்...''

''ஹாஸ்பிட்டல் பேரு...?''

''சுரக்ஷா மெடிக்கல் சென்டர்...''

''என்னோட பையனை உனக்கு எப்படிப் பழக்கம்...?''

தாமோதர் குறுக்கிட்டான்.

''அம்மா... ஏற்கெனவே அவ பயந்து நடுங்கிக்கிட்டே இங்கே வந்திருக்கா... இந்த நிலைமையில் நீ வக்கீல் குறுக்கு விசாரணை பண்ற மாதிரி அவகிட்டே கேள்வி கேட்டுட்டு இருந்தின்னா அவளுக்கு ஒரு மாதிரி அன் ஈஸியா இருக்கும்...''

''நீ சும்மா இரு தாமோதர்... இவ கிட்டே எதைக் கேட்கணும்... எதைக் கேட்கக் கூடாதுன்னு எனக்குத் தெரியும்... நீ சொல்லும்மா... இவனோட எப்படி உனக்கு பழக்கம் ஏற்பட்டுச்சு...?''

''எ...எங்க ஹாஸ்பிட்டல்ல இவரோட ப்ரெண்ட் ஒருத்தரை அட்மிட் பண்ணியிருந்தாங்க... அப்போ அடிக்கடி வரப்போக இருந்தார்...அப்போ ஏற்பட்ட பழக்கம்...''

''ஸோ... நீ அவனைக் காதலிக்க ஆரம்பிச்சிட்டியா...?''

''அ...அவரும் என்னை விரும்பறார்... அவர்தான் முதல்ல காதலைச் சொன்னார்....''

''எத்தனை மாசமா நீங்க காதலிக்கிறீங்க...''

''ஆறு மாசமா...''

"உங்க வீட்டுக்கு இந்த விஷயம் தெரியுமா...?"

"அம்மா மட்டும்தான் எனக்குன்னு இருந்தாங்க... ஒரு வருஷத்துக்கு முன்னால படுத்த படுக்கையாகி அவங்களும் இறந்த பிறகு நான் ஒண்டிக் கட்டையாத்தான் இருக்கேன்..."

"தாமோதர் உன்னைப் பார்க்க காரில்தானே வருவான்...?"

"ஆமா..."

"ஸோ... அவன் உன்னை விட பணக்காரன்னு உனக்கு நல்லாத் தெரியும்... இல்லையா...?"

"தெ... தெரியும்..."

"தெரிஞ்சுமா நீ அவனைக் காதலிச்சே?"

"ஆரம்பத்துல அவர் என்னை விடப் பணக்காரர்.... அந்தஸ்த்தில் உயர்ந்தவர்... இப்படியெல்லாம் நான் யோசிக்கவே யில்லை... அவரோட மனசு எனக்குப் பிடிச்சிருந்தது.... பழகும் முறை எனக்குப் பிடிச்சிருந்தது.... அவரும் என்னை விரும்பறேன்னு சொன்னப்ப மனசை அவர் கிட்டே பறி குடுத்துட்டு அவர் கூட சந்தோஷமா பழக ஆரம்பிச்சுட்டேன்... சமீப காலமா என்னோட ப்ரெண்ஸெல்லாம் கல்யா இன்விட்டேஷன் நீட்ட ஆரம்பிச்சுட்டாங்க... அதனால என்னை உங்க வீட்டில் அறிமுகப்படுத்தி வையுங்கன்னு இவர் கிட்டே கேட்டேன்.... அப்படிக் கேக்கறப்போதான்... இந்த அந்தஸ்து விவகாரமெல்லாம் என் மூளைக்கு உறைச்சது... இவர் தைரியம் சொல்லி என்னைக் கூட்டிட்டு வந்தார்... என்னோட அம்மா அப்பா நீ பயப்படற மாதிரி



நடந்துக்க மாட்டாங்க... மனப்பூர்வமா உன்னை ஏத்துப்பாங்கன்னு சொன்னார்..."

சிவகாமி அவளை ஊடுருவலாய்ப் பார்த்துக் கொண்டே கேள்வியை வெளி யிட்டாள்.

"இது அவனோட யூகம்... நீ பயப்படற மாதிரியே நடந்ததுன்னுவை... ஐ மீன்... நாங்க உங்க காதலை அங்கீகரிக்கவில்லைன்னா நீ என்ன செய்வே..."

"நிச்சயமா உங்க மேலோ... தாமோதர் மேலோ கோபப்பட மாட்டேன்... அந்தஸ்த்தை எண்ணிப் பார்க்காம காதலிச்சது என்னோட தப்புத்தான்... அந்த தப்புக்குக் கிடைச்ச தண்டனையா அதை எடுத்துகிட்டு ரயில் முன்னால பாய்ஞ்சு உயிரை விட்டுடுவேன்..."

அதிர்ச்சியோடு அவளைப் பார்த்த சிவகாமி செல்லமாய்க் கடித்து கொண்டாள்.

"பைத்தியக்காரி... இதுக்காகவெல்லாம் உயிரை விடறது பெரிய முட்டாள்த்தனம்... காதலும்... கல்யாணமும் மட்டும்தான் வாழ்க்கையா....? சாதிக்க வேண்டிய விஷயங்கள் அதுக்கு மேலும் எவ்வளவோ இருக்கே...?"

"காதலை அவ்வளவு ஈஸியா என்னால எடுத்துக்க முடியாது..."

சிவகாமி புன்னகைத்தாள்.

"கவலைப்படாதே... முதல் பார்வை யிலேயே உன்னை எனக்குப் பிடிச்சுப் போச்சு... இருந்தாலும் தாமோதரோட அப்பாவின் சம்மதம்தான் இதில் பெரிய முக்கியம்... அவர்கிட்டே சொல்றதுக்கு முன்னால உன்னை பத்தின எல்லா விவரங்களும் எனக்குத் தெரியணுமே...

அதனாலதான் இவ்வளவு நேரமா கேள்வி மேல கேள்வி கேட்டு உன்னை விசாரிச்சேன்... நீங்க ரெண்டு பேரும் இங்கே உக்கார்ந்திருங்க.... நான் அவர்கிட்டே போய் மெதுவா விஷயத்தை உடைச்சிட்டு வர்றேன்..."

சொல்லிவிட்டு மாடிப்படிகளில் உயர்ந் தாள் சிவகாமி.

தாமோதர் புன்னகைத்தான்.

"அம்மாவுக்கு உன்னைப் பிடிச்சுப் போச்சு... பாதிக்கிணறு தாண்டின மாதிரி தான்... அப்பாவும் ஓக்கே சொல்லிவிட்டார்னா இந்த உலகத்தில் இதைவிடப் பெரிய சந்தோஷமான விஷயம் நமக்கு வேற எதுவும் இருக்காது..."

மோனிஷா படபடப்போடு மாடிப் படியையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.



## 4



ஆள் நடமாட்டம் சொற்பமும் இருக்காத அந்த இடம் இந்த நிமிஷம் ஏராளமான ஆட்களின் பூட்ஸ் கால்களால் மிதிபட்டுக் கொண்டிருந்தது.

இருட்டான அந்தப் பகுதியில் ஃப்ளாஷ் விளக்குகள் நிறுத்தப்பட்டு இருந்தன. ரயில்வே லைனில் இருந்து பெறப்பட்ட மின்சாரத்தைத் தின்று ப்ளாஷ் விளக்குகள் வெளிச்சத்தைத் துப்பின.

ரயில்வே போலீசாரும் லோக்கல் போலீசாரும் கலப்படமாய்த் தெரிந்தார்கள்.



இன்ஸ்பெக்டர் பிரேம்நாத்தும், சப்-இன்ஸ்பெக்டர் திவாரியும் ஒரு முறை மேலோட்டமாக அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு - ரயில்வே போலீசிடம் வந்தார்கள்.

"பாடியை முதல்ல பார்த்தது யாரு...?"

"ரயில்வே ஸ்டாஃப் ராஜு...."

"எங்கே அந்த ராஜு...?"

ஓரமா நின்றிருந்த ராஜுவை கை காட்டினார்கள்.

பிரேம்நாத் அவனை நெருங்கிச் சென்றார்.

"நீதான் ராஜுவா..."

அந்தக் குளிரிலும் முத்து முத்தாக வியர்த்துப் போயிருந்த ராஜு மெதுவாய்த் தலையை ஆட்டினான்.

"ஆமா ஸார்..."

"மெயிண்டனன்ஸ் மெக்கானிக்..."

"இந்த நேரத்தில் இங்கே எங்கே வந்தே...?"

"மெயின்டனன்ஸ் வேலைக்காகத்தான் ஸார்..."

"இந்த இருட்டான நேரத்திலா..."

"நக்ஸலைட்ஸ் ட்ராக்கிற்கு சேதம் விளைவிக்கலாம்ன்னு சி.ஐ.டி. போலீஸ்கிட்டே இருந்து தகவல் வந்ததாம்... அதனால சூபர்வைசர் என்னைக் கூப்பிட்டு இந்த இரண்டு கிலோ மீட்டர் ட்ராக்கை செக் பண்ணிட்டு வரச் சொன்னார்... அதனாலதான் நான் ட்ராக் ஓரமா நடந்தபடியே போல்ட் ஜாயிண்ட்களை செக் பண்ணிட்டே வந்தேன்..."

''அப்போதான் இந்தப் பொண்ணைப் பார்த்தியா...''

''ஆமா ஸார்... சபர்பன் ட்ரெயின் வர்றதுக்கா பச்சை சிக்னல் விழுந்திருந்தது. நான் ட்ராக்கை விட்டு ஒதுங்கி நடந்துட்டிருந்தேன்... தண்டவாளத்தின் மேலே ஒரு பொண்ணு படுத்திருக்கிறதை எதேச்சையா பார்த்ததும் அதிர்ச்சி ஆயிட்டேன்...''

பிரேம்நாத் திகைப்போடு அவனைப் பார்த்தார்.

''இந்தப் பொண்ணு தண்டவாளத்தின் மேலா கிடந்தா...''

''ஆமா ஸார்...''

''எப்படிக் கீழே வந்தா...? நீ பார்க்கிறப்போ இவளுக்கு உயிர் இருந்ததா...''

''முதல்ல பார்த்ததும் தற்கொலை பண்ணிக்கிற நோக்கத்தோட யாரோ ஒரு பொண்ணு தண்டவாளத்தில் தலையைக் குடுத்துப் படுத்திருக்குன்னுதான் நான் நினைச்சேன்... ஆனா... அவளைத் தண்டவாளத்தை விட்டு அப்புறப்படுத்தினப்போ தான் டெட்பாடிங்கற உண்மை தெரிஞ்சது...''

''அவ உயிரோட இருக்காள்ங்கற எண்ணத்தில் அவசரமா அவளை ட்ராக்கை விட்டு கீழே தூக்கிப் போட்டியா...''

''ஆமா ஸார்... ட்ரெயின் வந்துடுச்சு... அவளைக் காப்பாத்தணும்ன்னா தூக்கி அப்பால் போடறதைத் தவிர வேற வழியில்லை... தூக்கிப் போட்டப்ப சலனமே இல்லை... உடம்பெல்லாம் வேற ப்ளட்டா இருந்தது.... ஏற்கெனவே கொலை செய்யப் பட்டிருக்காள்ன்னு எனக்கு அப்போதுதான் தெரிஞ்சது...''



''நடந்ததையெல்லாம் அப்படியே ஒரு ஸ்டேட்மெண்டா எழுதிக் கொடுத்திடு...''

ராஜு தலையை ஆட்டினான்.

அவனை விட்டு விலகி வந்தார் பிரேம்நாத்.

சப்-இன்ஸ்பெக்டர் அவரை நெருங்கி வந்து கேட்டார்.

''அந்த ராஜு என்ன சொல்றான் ஸார்...?''

''உருப்படியான தகவல் எதுவுமில்லை... கொலையாளி பாடியை தண்டவாளத்தின் மேலதான் டிஸ்போஸ் பண்ணியிருக்கான்... ராஜுதான் அந்தப் பொண்ணை எடுத்துக் கீழே போட்டிருக்கான்... அவன் கிட்டே பேசினதில்... நமக்குக் கிடைச்ச புதுத் தகவல் இது ஒண்ணுதான்...''

''அந்தப் பொண்ணை அவன் தண்டவாளத்திலிருந்து கீழே எடுத்துப் போட்டானா.''

''எஸ்... ஏதோ சூயிசைட் அட்டெம்ட்டுன்னு நினைச்சிகிட்டான்.''

''இந்த ஸ்டேட்மெண்ட் எங்கேயோ இடிக்கிற மாதிரி இருக்கே...?''

''என்ன சொல்றீங்க திவாரி...?''

''இப்படி ஏன் இருக்கக் கூடாது...? இந்த பொண்ணோட மரணத்துக்கு ஏதோ ஒரு வகையில் ராஜுதான் காரணம்... அவனோட ஃபிங்கர் ஃப்ரிண்ட்ஸ். அந்தப் பொண்ணு மேல விழுந்திருக்க வாய்ப்பிருக்கு... ஃபாரன்சிக் ஆட்கள் அதை எப்படியும் கண்டு பிடிச்சிடுவாங்க... உன்னோட ஃபிங்கர் ப்ரிண்ட்ஸ் எப்படி இந்தப் பொண்ணு மேல படிஞ்சிருக்குன்னு நாம கொஸ்டின் ரெய்ஸ் பண்ணுவோம்... ட்ராக்கை விட்டு பாடியை தூக்கிப் போட்டப்ப ஃபிங்கர் ஃப்ரிண்ட்ஸ்

விழுந்திருக்கலாம்... நான் ஏற்கெனவே உங்ககிட்டே சொன்னேனே... இப்படிச் சொல்லி அவன் தப்பிச்சிக்கலாமே..."

திவாரி சொன்னதைப் புன்னகையுடன் மறுத்தார் பிரேம்நாத்.

"உங்க லாஜிக்கில் பெரிய ஓட்டை இருக்கு திவாரி..."

"ஏன் ஸார் அப்படிச் சொல்றீங்க...?"

"ட்ராக் மேலே பாடியைப் போட்டுட்டா ரயில் ஏறி பாடி பீஸ் பீஸா சிதறிப் போயிடும்... இப்போ நமக்கு கிடைச்சிருக்கிற அளவில்கூட தடயம் எதுவும் கிடைக்காது... கொலையாளியின் நோக்கம் அதுதான்... ராஜு நினைச்சிருந்தா அப்படி செஞ்சிட்டு கமுக்கமா இருந்திருக்கலாம்... ட்ராக்கை விட்டு பாடியை கீழே தள்ளி சூபர்வைசருக்கு தகவலும் தந்திருக்கான்... அவனை சந்தேகப்பட எந்த முகாந்திரமும் கிடையாது.... தவிர எட்டு மணி நேரம் ட்யூட்டியில் இருந்துட்டு ஓவர் டைம் ட்யூட்டியில் ட்ராக் செக் பண்ண வந்திருக்கான்... ட்யூட்டீயில் இருந்தவன் எப்படிக் கொலை செஞ்சிருக்க முடியும்...?"

"இந்த பாயிண்ட்ஸை எல்லாம் நான் யோசிக்கவே இல்லை ஸார்..."

"இந்த கேஸ் நீங்க நினைக்கிற அளவுக்கு சுலபமா இருக்கப் போறதில்லை திவாரி..."

"ஏன் ஸார் இப்படிச் சொல்றீங்க...?"

"குற்றவாளி தடயங்களை மறைப்பதில் குறியா இருந்திருக்கான்... அந்த நோக்கத்தில் தான் செத்துப்போன பெண்ணின் உடம்பில் இருந்து உடைகளைக் கூட அப்புறப்படுத்தி இருக்கான்... அடையாளம் தெரியாதபடி மூஞ்சியை சிதைச்சிருக்கான்... அதுவும்



போதாதுன்னு பிணத்தை ரயில் தண்டவாளத்தின் மேல் போட்டு சுத்தமா தடயங்களை அழிக்கப் பார்த்திருக்கான்... இந்த ராத்திரி நேரத்தில் ட்ராக் செக்கிங்கிற்காக ராஜு வந்தது அவன் எதிர்பாராம நடந்தது...."

"இது மாதிரி எதிர்பாராத தடயங்கள் ஏதாவது இந்த இடத்தில் கிடைக்கலாம். இல்லையா ஸார்...?"

"அதை நம்பித்தான் கேஸே இருக்கு... கண்ணில் விளக்கெண்ணையை விட்டுக்கிட்டு இந்தப் பிராந்தியத்தை அலசிப் பார்க்கணும்..."

அவர் சொன்ன விநாடி - பாரன்சிக் ஆபீஸர் விக்டர் அருகில் வந்தார்.

"இன்ஸ்பெக்டர்..."

ப்ரேம்நாத் திரும்பினார்.

"சொல்லுங்க விக்டர்..."

"டயர் மார்க் கிடைச்சிருக்கு..."

"இசிட்...? எங்கே...?"

விக்டர் சற்றுத் தள்ளிக் கூட்டிச் சென்றார்.

அவர் கை காட்டிய இடத்தில் வெள்ளை நிறத்தில் ரசாயனப் பவுடர் தூவப்பட்டிருக்க - பளிச்சென்று கார் டயரின் தெளிவுகள் அங்கே பதிவாகியிருந்தன.

"ஸோ... காரில் வந்து டிஸ்போஸ் பண்ணிட்டுப் போயிருக்காங்க..."

"ஆமா..."

"டயர் மார்க் பார்த்தா அம்பாஸடர் காரா இருக்கலாம்ன்னு தோணுது..."

"எஸ்... ரெண்டு டயருக்கு இடைப்பட்ட தூரத்தை அளந்து பார்த்து அதைக் கன்பார்ம் பணணிக்கலாம்..."

"கேஸை நகர்த்திட்டுப் போக இந்த க்ளூ மட்டும் உபயோகப்படாது விக்டர்... சிடிக்குள்ளே ஆயிரக்கணக்கில் அம்பாஸடர் கார்கள் இருக்கு... இந்தக் க்ளூவை வெச்சிட்டு கொலையாளியைத் தேடறது வைக்கோல் போர்க்குள்ளே விழுந்த ஊசியைத் தேடற மாதிரியான காரியம்...."

"கொலையாளி ப்ரில்லியண்ட்டா தடயங்களை அழிக்க முயற்சி பண்ணி யிருக்கான். இன்ஸ்பெக்டர்... ஒரு சின்ன ஃபிங்கர் ப்ரிண்ட் கூட கிடைக்கலை..."

விக்டர் கவலையான குரலில் சொல்லிக் கொண்டிருந்த விநாடி.

"ஸார்..."

இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

கான்ஸ்டபிள் ஒருவர் வந்து நின்றிருந்தார்.

"இது கீழே கிடந்தது ஸார்..."

அவர் கையில் பிடித்திருந்த வஸ்துவைப் பார்த்ததும் இருவரின் புருவங்களும் சுருங்கின.

"இந்தப் பெண்ணோடதுதான்னு நினைக் கிறேன்..."

கான்ஸ்டபிள் சொல்லிக் கொண்டிருக்க - அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பிரேம்நாத்தின் முகப்பரப்பில் சந்தோஷத்தின் ரேகைகள் குறுக்கும், மறுக்கும் ஓட ஆரம்பித்தன.




சிவகாமி படியிலிருந்து இறங்கி வந்தாள்.



ஆர்வத்தோடு அவள் முகத்தையே பார்த்தாள் மோனிஷா. தாமோதரின் பார்வை யும் சிவகாமியின் மேல் ஆணியடித்தாற்போல் நின்றிருந்தது.

கீழே வந்ததும் அவள் உதடுகளில் புன்னகை வெளிப்பட இரண்டு பேரின் இருதயத்துள்ளும் நிம்மதி மூச்சு பரவ ஆரம்பித்தது.

தாமோதர் அவசரமாய்க் கேட்டான்.

"அப்பா கிட்டே சொன்னியாம்மா..."

"சொல்லிட்டேன்..."

"அப்பா என்ன சொன்னார்...?"

"உங்க ரெண்டு பேரையும் மேலே வரச்சொன்னார்..."

"பாசிட்டிவ்வா பேசினாராம்மா...?"

"அவர் முகத்தை வெச்சி எதையும் கண்டுபிடிக்க முடியலை... நான் சொன்னதை. எல்லாம் பொறுமையா கேட்டுகிட்டார்.... அந்தப் பொண்ணு இப்போ வந்திருக் காளான்னு கேட்டார். ஆமான்னு நான் சொன்னதும்... ரெண்டு பேரையும் மேல அனுப்பிவைன்னு சொன்னார்.."

"எங்களை இப்படி டென்ஷன் ஆக்கறது உங்களுக்கே நல்லா இருக்கா...? அவங்க காதலை ஏத்துக்கறீங்களா இல்லையான்னு வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டா கேட்டுட்டு வந்திருந்தீங்கன்னா மோனிஷா கொஞ்சம் பரபரப்பு இல்லாத மனசோட போய் அப்பாவை சந்திப்பாளே..."

"அவரைப் பத்தி எனக்குத் தெரியும். நான் கேட்டாலும் கேட்டவுடனே சொல்ல மாட்டார்..."

"உனக்குத்தான் அவரைப் பத்தி நல்லாத் தெரியுமே... எங்க காதலுக்கு அவர் பச்சைக் கொடி காட்டுவாரா மாட்டாரா...?"

"என்னோட சைடு நான் ஒக்கே சொல்லிட்டேன்... அவரை கன்வின்ஸ் பண்ண வேண்டியது உங்க ரெண்டு பேரோட பொறுப்பு... அவர் சரின்னு சொன்னாத்தான் எல்லாமே சரியா நடக்கும்..."

மோனிஷா கவலையான கண்களோடு சிவகாமியையும், தாமோதரையும் மாறி மாறிப் பார்க்க - தாமோதர் ஆதரவாய் அவள் முதுகைத் தட்டினான்.

"கவலைப்படாதே மோனிஷா.... நான் அவ்ரை எப்படியாவது கன்வின்ஸ் பண்ணிடுவேன்..."

இருவரும் படிகளில் மேல் நோக்கி தடதடத்துச் சென்றார்கள்.

வளைந்து செல்லும் படிகள் முடியும் இடத்தில் ஃப்ளஷ்டோர் ஒன்று தெரிந்தது.

கதவின் இரண்டு பீக்கமும் இரு பூந்தொட்டிகள் வைக்கப்பட்டு அதில் சிந்தெடிச் செடிகளும் பூக்களும் பூத்துக் கிடந்தன.

கதவைத் தள்ளினான் தாமோதர்.

கால்வாசி திறந்த கதவில் உள்ளே முகத்தை நீட்டி - உறுத்தாத குரலில் கேட்டான்.

"அப்பா... உள்ளே வரலாமா..."

"வா... தாமோதர்..."

வெண்கலத்தின் கம்பீரத்தோடு குரல் கேட்டது.



உள்ளே நுழைந்த தாமோதர் தயக்கமாய் வாயிலில் நின்று விட்டு மோனிஷாவைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"ஏன் நின்னுட்டே...? உள்ளே வா மோனிஷா..."

அவள் தயக்கம் விலகாத நடையோடு அந்த அறைக்குள் நுழைந்தாள்.

விஸ்தாரமாய் இருந்த அந்த அறை ஒரு நேர்த்தியான ஆபீஸின் தோற்றத்துடன் இருந்தது.

ஷெல்புகள்.

மேஜைகள்.

கம்ப்யூட்டர்.

தடிமன் தடிமனாய்ப் புத்தகங்கள்.

சுழல் நாற்காலியில் அப்பா மருதாசலம் உட்கார்ந்திருந்தார்.

ஆஜானுபாகுவான தோற்றம். நெற்றியில் அழுத்தமாய் மூன்று வரிகளில் விபூதிப் பட்டை. ஒரு வரியின் மையத்தில் நாலணா சைசுக்கு குங்குமப்பொட்டு காம்பஸின் உதவியுடன் அடித்த வட்டம் போல் ஒட்டியிருந்தது. தங்க பிரேம் கண்ணாடி அணிந்திருந்தார்.

சுற்றுச் சுவர் பூராவும் ப்ளாஸ்டிக் மோல்டிங் செய்யப்பட்ட புகைப்படங்கள் வரிசையாய் அப்பிக் கிடந்தன.

எல்லாப் புகைப்படத்திலும் பெரிய அரசியல் தலைவர்களோடு, நடிகர்களோடு பிரபல முகங்களோடு மருதாசலம் இருந்தார்.

மேஜைக் கண்ணாடிக்குக் கீழே பேப்பர் கட்டிங்குகள், அவற்றில் போட்டோவுடன் அவர் சம்பந்தப்பட்ட பேட்டிகள், செய்திகள்.

ஐக்கிய முன்னணி அரசு கவிழ்ந்து பாரதிய ஜனதா ஆட்சியைப் பிடிக்கும்...

வாஜ்பாய்தான் அடுத்த பிரதமர்...

பிரபல கவர்ச்சி நடிகை அகால மரணம் அடைவார்... என்று ஆண்டு பலனில் அன்றே சொன்னார் ஜோட வித்வான் கலைசிகாமணி மருதாசலம் அவர்கள். சில்க் சுமிதாவின் மரணச் செய்தியைப் போட்டு அருகில் இவரின் படத்தையும் போட்டிருந்தார்கள்.

தமிழகம் வந்த மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் பிரபல ஜோதிடர் மருதாசலத்தை சந்தித்துவிட்டுச் சென்றார். ஒரு நாளிதழ் மூலையில் பெட்டிச் செய்தி.

அவரைப் பார்த்து வணக்கம் சொன்ன மோனிஷாவின் கரங்கள் லேசாக நடுங்கிக் கொண்டிருந்தது.

மருதாசலம் புன்னகைத்தார்.

''உக்காரும்மா...''

நுனி இருக்கையில் உட்கார்ந்தவளின் உடலில் மெல்லிய நடுக்கம் நீடித்துக் கொண்டே இருந்தது.

மருதாசலம் புன்னகையோடு அவளைப் பார்த்துக் கேட்டார்.

''நீ ரொம்ப தைரியசாலியான பொண்ணா இருப்பேன்னு நினைச்சேன்... இப்படி பயந்து நடுங்கிட்டிருக்கியே...? நான் என்ன சிங்கமா புலியா...? என்னைப் பார்த்து இவ்வளவு பயப்படறியே...''

''இ....இல்லை ஸார்...''

அவர் சகஜமாய் பேச ஆரம்பித்ததனால் அவளுக்குள் நீடித்த பரபுரப்பு மெல்ல மெல்ல அடங்க ஆரம்பித்தது.



அவர் வார்த்தைகளைத் தொடர்ந்தார்.

''சிவகாமி என்கிட்டே எல்லா விஷயத்தையும் சொன்னா... நல்ல முடிவா சொல்லுங்கன்னு உங்களுக்காக என் கிட்டே சிபாரிசும் பண்ணினா...! நான் முடிவு சொல்றதுக்கு என்னம்மா இருக்கு... பழமையான ஒரு கலையில் தேர்ச்சி பெற்றிருக்கிற நான் உண்மையில் ஒரு புதுமை விரும்பி.... என்னோட சிந்தனைகளில் எப்பவுமே பழமை இல்லை... கல்யாண விஷயத்தைப் பொறுத்த வரைக்கும் முதல்ல என்னோட மகன் தாமோதரோட விருப்பம் முக்கியம்... அடுத்த படியா நீ அவனோட அம்மாகூடத்தான் இருக்கப் போற..... பிரபலமான அஸ்ட்ராலஜிஸ்ட்டா இருக்கிறதால மாசத்தில் பாதி நாளுக்கு மேல் வெளியூர் ஸ்டார் ஹோட்டல்களில் கேம்ப் நடத்தவும்... பெரிய மனிதர்களைச் சந்திக்கவுமே எனக்கு நேரம் சரியா இருக்கும்... இது மாதிரி வீட்டில் நான் ஃப்ரியா உட்கார்றது அபூர்வம்... மாசத்தில் ஒண்ணு ரெண்டு நாள்தான் நான் இப்படி வீட்டில் கிடைப்பேன்...''

தாமோதர் மகிழ்ச்சி தவழும் முகத்தோடு அவரைப் பார்த்துச் சொன்னான்.

''அப்பா... எனக்கு மோனிஷா மேலே கொள்ளை இஷ்டம்... அம்மாவுக்கும் இவளைப் பிடிச்சிருக்கு...''

''தென் எனக்கும் நோ ப்ராப்ளம்...''

தீர்க்கமான குரலில் சொன்ன அவரைப் பார்த்து ஆச்சர்யத்தோடு கேட்டாள் மோனிஷா.

''எ...என்னால என் காதுகளையே நம்ப முடியலை ஸார்... நீங்க நிஜமாகத்தான் சொல்றீங்களா...?''

மருதாசலம் சிரித்தார்.

''வருங்கால மாமனாரை ஸார்ன்னு கூப்பிடறியே...? அங்க்கிள்ன்னு கூப்பிடு...''

''ஸ...ஸார்... ஸாரி அங்க்கிள்... நீங்க என்னைப் பத்தி எதுவும் விசாரிக்கலையே... அதுக்கு முன்னால கொஞ்சம் கூட யோசிக்காம சம்மதிச்சிட்டிங்களே...?''

''தாமோதருக்கு உன்னைப் பிடிச்சிருக்கு... சிவகாமிக்கும் உன்னைப் பிடிச்சிருக்கு... இதுக்கு மேல நான் என்ன யோசிக்கணும்...'

''எனக்குன்னு சொந்த பந்தம் யாரும் கிடையாது... இந்த பங்களாவோட ஒப்பிட்டுப் பார்த்தா நான் தங்கியிருக்கிற வாடகை வீட்டைக் குடிசைன்னுதான் சொல்லணும்... உங்க வீட்டில் ஆளுக்கொரு கார் வெச்சிருக்கீங்க... மாடலுக்கு ஒரு கார் வெச்சிருக்கீங்க... ஆனா நான் ஒரு இடத்துக்கு ஆட்டோவில் போணும்ன்னாகூட ஒரு குட்டி பட்ஜெட் வட்டத்தொடரையே மனசுக்குள் நடத்திப் பார்த்துட்டு அப்புறமாதான் ஆட்டோ ஏறுவேன்... ஒரு வேளை பட்ஜெட் உதைக்கிற மாதிரி தெரிஞ்சதுன்னா... ஒரு மணி நேரமானாலும் காத்திருந்து டவுன் பஸ் பிடிச்சுப் போற ரகம்...''

''அதனால என்ன மோனிஷா... உன் பேர் மோனிஷா தானே...?''

''ஆமா அங்க்கிள்...''

''பட்ஜெட் பார்த்து செலவு பண்ற பொண்ணுதான் இந்த வீட்டுக்கு மருமகளாத் தேவை... ஏன்னா இவன் பிறந்த நாளிலிருந்தே ராஜ வாழ்க்கைதான்... பணத்தைத் தண்ணி மாதிரி செல்வழிப்பான்... பணக்கஷ்டம்ன்னா என்னன்னே இவனுக்குத் தெரியாது... ஒரே



பையனா போயிட்டதால் நாங்களும் இவனுக்கு நிறைய செல்லம் கொடுத்து வளர்த்திட்டோம்... அதுக்காக பொறுப்பில்லாம ஊதாரித்தனமாக இருக்கான்னு நான் சொல்ல வரலை... மணி மேனேஜ்மெண்ட்டில் இவன் கொஞ்சம் வீக்.... உன்னை மாதிரி ஒரு பொண்ணு வந்தால்தான் அந்த வீக்னஸ் பாலன்ஸ் ஆகும்...''

ஆச்சர்யம் விலகாத குரலில் மோனிஷா சொன்னாள்.

''நான் பயப்பட்டதுக்கு நேர் மாறா இங்கே எல்லாமே நடக்கிறது அங்க்கிள்... எங்க காதல் விஷயத்தை உடைச்சதுமே இங்கே ஒரு பெரிய புயலே அடிக்கப் போகுது... நம்ம அந்தஸ்த்துக்குக் கொஞ்சமும் பொருத்தம் இல்லாத ஒரு பொண்ணைக் கூட்டிட்டு வந்து நிக்கிறயேடான்னு நீங்க வானத்துக்கும்... பூமிக்குமா குதிக்கப் போறீங்கன்னு நினைச்சேன்... படாதபாடு பட்டுத்தான் தாமோதர் உங்களைக் கன்வின்ஸ் பண்ண வேண்டியிருக்கும்ன்னு நினைச்சிட்டு இருந்தேன்...''

மருதாசலம் சிரித்தார்.

''பணத்தை பெரிசா நினைக்கிறவங்கதான் அந்தஸ்த்தில் குறியா இருப்பாங்க... நான் அப்படி இல்லை... நான் பட்ஜெட் வாழ்க்கை வாழ்ந்துட்டு வர்றவள்ன்னு கொஞ்சம் முன்னால நீ சொன்னியே... உனக்காகவது பட்ஜெட் போட்டுப் பார்க்க மாச சம்பளம் வந்துட்டிருக்கு... அதைவிட மோசமான வறுமையிலதான் நான் இருந்தேன்... சாதாரண ஜோதிடனுக்கு என்ன பெரிசா சம்பாத்தியம் இருந்திடப் போகுது... ஆனா எடுத்துக்கிட்ட துறையில் ஞானத்தை வளர்த்துக்க நான் தவறவேயில்லை... இருபத்தியாறு இருபத்தி

யேழு வயதில் எனக்கு இந்தக் கலையில் நல்ல தேர்ச்சி கிடைச்சிடுச்சு... கடவுள் அருளால் என்னோட கணக்குகள் எல்லாமே மிகத் துல்லியமா இருந்தது... மெல்ல மெல்ல வளர ஆரம்பிச்சேன்... மூணே வருஷத்தில் அகில இந்திய அளவில் பிரபலமாயிட்டேன்... அதுக்கப்புறம் வந்ததுதாம்மா இந்தக் கார்... பங்களா... எல்லாமே..."

"அப்படின்னா முழு மனசோடதான் என்னை நீங்க ஏத்துகிட்டீங்களா..."

"அதிலென்ன சந்தேகம்...?"

"தாங்க்யூ வெரி மச் அங்க்கிள்... நல்ல மனுஷங்க இருக்கும் குடும்பத்தில் வாழ்க்கைப் படறதுக்காக எந்த ஜன்மத்திலோ நான் புண்ணியம் செஞ்சிருக்கணும்..."

"உன்னை மாதிரி அழகான... அறிவான... பொறுப்பான பொண்ணு கிடைக்க நாங்களும் தான் புண்ணியம் பண்ணியிருக்கணும்..."

அடக்கமாய்ச் சொன்ன மிருதாசலத்தை கண்ணீர் மல்கப் பார்த்தாள் மோனிஷா.

அவர் தொடர்ந்தார்.

"எங்க வீட்டு வருங்கால மருமகள் நீ.... முதல் முதலா வீட்டுக்கு வந்திருக்கே... யாரோ மூணாம் மனுஷன் வந்த மாதிரி இவ்வளவு நேரமா உன்னை ஆபீஸ் அறையிலேயே உக்கார வெச்சு பேசிட்டிருக்கோம்...! வாம்மா கீழே போகலாம்... இன்னிக்கு நாம எல்லாருமா ஒண்ணா உக்காந்து டின்னர் சாப்பிடலாம்..."

மோனிஷா ஏராளமான சந்தோஷத்தில் இருந்தாள்.

வார்னீஷ் பளபளப்பு மின்னும் டைனிங் டேபிளில் சாப்பிடும்போது அவள் சொன்னாள்.



"அங்க்கிள்.... அடுத்த முறை நான் தாமோதரைப் பார்க்கிறப்போ என்னோட ஹாரஸ்கோப்பை அவர் கிட்டே கொடுத்து விடறேன்... அந்த ஜாதகத்தைப் பார்த்து எங்க திருமண வாழ்க்கை எப்படி இருக்கும்ன்னு சொல்லுங்க..."

"நோ... நோ... அதெல்லாம் வேண்டாம்."

மோனிஷா ஆச்சர்யத்துடன் நிமிர்ந்தாள்.

"ஏன் வேண்டாம்ன்னு சொல்றீங்க...?"

"உங்க ரெண்டு பேர்க்கும் ஜாதகப்படி பொருத்தம் இல்லாம இருந்தா அப்புறம் நம்ம எல்லார்க்கும் மனசுக்குக் கஷ்டமா இருக்கும்."

"பொருத்தம் இல்லாம இருந்தா நாங்க ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிகிட்டு பழகு வோமா...! கண்டிப்பா பொருத்தம் இருக்கும்... பிரபலமான அஸ்ட்ராலஜிஸ்ட் நீங்க... உங்க கிட்டே நானே பார்க்கலைன்னா எப்படி? எங்க திருமண வாழ்க்கை எப்படி இருக்கும்ன்னு முன்கூட்டியே பார்க்கிறதில் என்ன தப்பு..."

"சொன்னா கேளும்மா... மனப்பொருத்தம் இருந்தா வேற எந்தப் பொருத்தமும் பார்க்க வேண்டியதில்லை... வீணா மன வருத்தத்தை வரவழைச்சிப்பானேன்...?"

"பெரிய அரசியல் தலைவர்கள்... பிரபல ஆட்கள் இவங்களோட ஹாரஸ்கோப்பைத் தான் நீங்க பார்ப்பீங்க... என்னை மாதிரி சின்னப் பொண்ணோட ஜாதகத்தை எல்லாம் பார்க்க விரும்ப மாட்டிங்க அப்படித்தானே...?"

சிவகாமி குறுக்கிட்டாள்.

"மோனிஷா முதல் முதலா உங்க கிட்டே ஒரு சின்ன ஆப்ளிகேஷன் கேட்டு இருக்கா... அவளோட ஜாதகத்தை வாங்கி நம்ம

தாமோதரோட மேட்ச் பண்ணி பார்க்கறதில் என்ன கஷ்டம்..."

"சிவகாமி... நாம ரெண்டு பேருமே இவங்களோட விருப்பத்துக்கு மட்டுமே முதலிடம் கொடுத்து இவங்க காதலுக்கு பச்சைக்கொடி காட்டிட்டோம்... ஒருவேளை ஜாதக ரீதியா ரெண்டு போர்க்கும் பொருத்தம் இல்லாம இருந்தா அதுக்கப்புறம் உன்னோட மனசு இந்தத் திருமணத்துக்கு சம்மதிக்குமா?"

"ஏன் எதிர்மறையா நினைக்கறீங்க...? பொருத்தமெல்லாம் நிச்சயமா இருக்கும்... ரெண்டு பேரோட மேரேஜ் லைஃப் எப்படி இருக்கும்ன்னு மேலோட்டமா பார்த்து சொல்லுங்க போதும்..."

தலையசைத்தார் மருதாசலம்....

"ஓக்கே... நான் பார்த்து சொல்றேன்... மோனிஷா... நீ தாமோதர் கிட்டே உன்னோட ஹாராஸ்கோப்பை கொடுத்துவிடும்மா..."

"சரி அங்க்கிள்..."

உற்சாகத்தோடு தலையை ஆட்டினாள் மோனிஷா.

தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டிருக்கிறாள் என்பதை மோனிஷா அந்த நிமிஷம் அறிந்திருக்கவில்லை.



## 6



ஜீப்பை கடை வீதிக்குள் விரட்டினார் பிரேம்நாத்.

அவருக்கு இடது புறம் திவாரி உட்கார்ந்திருந்தார்.



கடைத்தெரு நெரிசலில் ஜீப் தேர் உலா மாதிரி மெதுவான வேகத்தில் ஊர்ந்தது.

திவாரி கேட்டார்.

"இந்த ஒத்தைச் செருப்பு உபயோகமான க்ளூவ்ன்னு நினைக்கிறீங்களா சார்...?"

"கண்டிப்பா..."

"இந்த செருப்பை வெச்சு அந்தப் பெண் யாருன்னு கண்டுபிடிச்சிட முடியுமா...?"

"முடியும்னு எனக்குள்ளே நம்பிக்கை இருக்கு... முதல்ல இந்தச் செருப்பு அந்தப் பொண்ணோடதுதானாங்கற சந்தேகம் இருந்தது.... சைஸை வெச்சு அந்தப் பொண்ணோட செருப்புத்தான்னு பாதி முடிவுக்கு வந்தோம்... அடுத்த கான்ஸ்டபிள் தேடி எடுத்துத் தந்த இந்த ஒத்தைச் செருப்பை பாரன்சிக் லேபுக்கு அனுபபி...செருப்பில் கண்ணுக்குத் தெரியாமல் திட்டுத்திட்டாயக் காய்ஞ்சு கிடக்கும் உள்ளங்கால் வியர்வைத் துணுக்குகளை ஒப்பிட்டுப் பார்த்து...செருப்பு அந்தப் பெண்ணோடதுதான்னு நூறு சதவீதம் உறுதிப்படுத்திக்கிட்டோம்."

"கொலையாளி கொலையை வேற எங்கோ பண்ணியிருக்கான்... பாடியை காரில் தூக்கிப் போட்டு அந்த ரயில்வே ட்ராக்குக்கு கொண்டு வந்திருக்கான்... ஆள் அரவம் இல்லாத அந்தப் பகுதியில் வெச்சு டிரஸ், நகைகள், இத்யாதிகளை ரிமூவ் பண்ணியிருக்கான்... என்னதான் ஆள் அரவம் இல்லாத இடம்ன்னாலும் அவனுக்குள்ளே பதட்டம் இருந்திருக்கும்... ஒரே ஒரு செருப்பு மட்டும் காருக்குள்ளிருந்து கீழே விழுந்ததைப் பதட்டத்தில் அவன் கவனிச்சிருக்க மாட்டான்..."

"யூவார் எக்சாட்லி கரெக்ட்..."

"இந்தச் செருப்பு எந்த விதத்தில் நமக்கு அந்தப் பொண்ணை அடையாளம் காட்டப் போகுது...?"

"இது புது செருப்பு... நாலஞ்சு நாளைக் குள்ளதான் அந்தப் பொண்ணு வாங்கி யிருக்கு... விலை லேபிள் கூட டேமேஜ் ஆகாம இருக்கு...இந்த ப்ரைஸ் லேபிள்தான் நமக்கு உதவிப் போகுது..."

பி.எஸ்.சி. பேட்டா மெரூன் நிறத்தில் அச்சிடப்பட்டு இருந்த அந்த சிறிய ஸ்டிக்கரின் ஓரத்தில் பால்பாயிண்ட் பேனாவினால் விலை கிறுக்கப்பட்டு இருந்தது.

அந்த பாட்டா ஷோரூமின் ஓரமாப் ஜீப்பை நிறுத்தினார் ப்ரேம்நாத்.

இருவரும் உள்ளே சென்றார்கள்.

ஏசி ஜில்லிப்பில் இருந்தது ஷோ ரூம்.

ஸேல்ஸ்மென் ஒருவர் அவர்களை நெருங்கி வந்தார்...

"வாடு கேன் ஐ டூ பார் யூ ஸார்...?"

ப்ரேம்நாத் சுருக்கமாக விபரத்தைச் சொல்லி அந்தச் செருப்பைக் காட்டினார்.

"செருப்பிலிருந்த ஸ்டிக்கரில் பாட்டான்னு போட்டிருந்ததால முதல்ல இந்த மெயின் ஷோரூமுக்கு வந்தோம்.... இந்தச் செருப்பு இங்கே ஸேல் ஆனதான்னு உங்களால சொல்ல முடியுமா...?"

"இங்கே விற்பனை ஆன செருப்பை என்னால ஐடெண்டிஃபை பண்ணி சொல்ல முடியும்... ஆனா இந்த செருப்பு இந்த ஷோ ரூம்ல வாங்கப்படலை..."



"வேற எங்கெல்லாம் பாட்டா ஷோ ரூம் இருக்கு...?"

"இந்தச் செருப்பை எந்த பாட்டா ஷோ ரூமிலும் வாங்கியிருக்க வாய்ப்பில்லை ஸார்..."

"வாட் டூ யு மீன்...? பாட்டான்னு ப்ரைஸ் ஸ்டிக்கர் செருப்பு மேல ஒட்டியிருக்கே...?'

"பிஎஸ்ஸி பாட்டான்னு போட்டிருக்கு... இது ஒரிஜினல் பாட்டா இல்லை... அநேகமா எல்லா ஷூ மார்க்கெட்டிலும் இந்த வகை செருப்புகள் கிடைக்கும். விசாரிக்கறதுன்னு வந்துட்டா அத்தனை கடைகளையும் அலசிப் பார்க்கறதைத் தவிர வேற வழியில்லை..."

சோர்வான பார்வையில் அநத ஸேல்ஸ் மேனை ஏறிட்டார் ப்ரேம்நாத்.

"அது ரொம்ப டீடியஸ் ஜாப் ஆச்சே..."

"வேற வழியில்லை ஸார்..."

சொன்ன ஸேல்ஸ் மேன்... சட்டென்று பிரகாசமாகி வார்த்தைகளைத் தொடர்ந்து வெளியிட்டார்.

"சர்ச்சிங் சுலபமாகறதுக்கு ஒரே ஒரு வாய்ப்பு இருக்கு..."

"எப்படி...?"

"இந்த ஸ்டிக்கர் டிசைன்...! இது மாதிரி டிசைன்ல யார் ஸ்டிக்கர் வெச்சிருக்காங்கன்னு சில சமயம் கடைக்காரர்களுக்கு தெரிஞ் சிருக்கலாம்... அசோஷியேஷன் மீட்டிங்கில் அடிக்கடி சந்திச்சுப்பாங்க... சில பேர் தங்களுக் குள்ளே ஸேம்ப்பிள்ஸ் பரிமாறிப்பாங்க... நீங்க முயற்சி பண்ணிப்பாருங்க ஸார்..."

தலையசைத்த ப்ரேம்நாத் கேட்டார்.

''உங்க இன்பார்மேஷனுக்கு ரொம்ப தாங்க்ஸ்... கடைசியா ஒரே ஒரு தகவல் மட்டும் சொல்லுங்க...''

''என்ன தகவல் ஸார்...?''

''ஸ்டிக்கர்ல விலை கிறுக்கலா எழுதியிருக்கு... இந்த செருப்பு என்ன விலை இருக்கும்...?''

செருப்பை வாங்கி மேலும் கீழும் பார்த்த அந்த ஸேல்ஸ் மேன் சில விநாடிகள் கண்ணை மூடிக் கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டு தீர்க்கமான குரலில் சொன்னார்.

''நிச்சயமா இந்தச் செருப்பு முன்னூத்தைம்பது ரூபாய்க்கு குறையாம இருக்கும்...''

அவரிடம் விடை பெற்றுக் கொண்டு வந்தார்கள் ப்ரேம்நாத்தும் திவாரியும்.

''திவாரி... இந்த செருப்பை வெச்சு விசாரிக்கணும்ன்னா ஒரு டீம் ஃபார்ம் பண்ணி சிடியின் நாலா திசைகளிலும் அனுப்பணும் போலிருக்கே...?''

''ஷார்ட் கட்ல நாம ஒரு முயற்சி பண்ணிப் பார்க்கலாம் ஸார்...''

''என்ன முயற்சி...?''

ப்ரேம்நாத் கேட்க - திவாரி புன்னகைத்தார்.

''அது உங்களுக்கே தெரியும் ஸார்... அந்த நோக்கத்தில்தான் நீங்க ஸேல்ஸ்மேன்கிட்டே செருப்பின் விலையைக் கேட்டீங்க... காஸ்டலியான செருப்பை அந்தப் பொண்ணு வாங்கியிருக்கு... நிச்சயமா ஓரளவுக்கு டீஸண்ட்டான பெரிய ஷோரூமுக்குத்தான் போயிருக்கணும்... அதனால நாம ரெண்டமா பெரிய கடைகளை அலசிப் பார்க்கலாம்...''



''குட்...''

அவரைப் பாராட்டிய ப்ரேம்நாத் ஜீப்பின் ஸ்டியரிங்கைப் பிடித்தார்.

தேர்ந்தெடுத்த ஷோரூம்களை ஒரு ரவுண்ட் வந்தார்கள்.

கஸ்தூரிபாய் நகர் அருகே இருந்த அந்த ஷோரூமில் விசாரித்துக் கொண்டிருக்கும் போது - லஞ்ச் முடித்துவிட்டு அப்போதுதான் வந்திருந்த கடை உரிமையாளர் குறுக்கிட்டார்.

''அந்த ஸ்டிக்கரை கொஞ்சம் காட்டுங்க.''

திவாரி அவரிடம் செருப்பை நீட்டினார்.

கடை ஓனர் சொன்னார்.

''இது கந்தமனோகரரோட ஷோரூமில் வாங்கின செருப்பு...''

''கந்தமனோகர் யாரு...? எங்கிருக்கு அவரோட ஷோரூம்...?''

''ஷோரூம் திருவான்மியூரில இருக்கு...''

''அங்கேதான் வாங்கியிருப்பாங்கன்னு எப்படி இவ்வளவு உறுதியா சொல்றீங்க...? ஸ்டிக்கர் டிசைனை வெச்சா...?''

''அதுமட்டுமில்லை இன்ஸ்பெக்டர்... இது கந்தமனோகர் கடையில் வாங்கின செருப்பு தான்னு அடிச்சு சொல்ற மாதிரி க்ளூ இந்த ஸ்டிக்கர்ல இருக்கு...''

''என்ன அது...?''

''கிறுக்கலான ஸ்டிக்கர் மேல விலை எழுதியிருக்கு பார்த்தீங்களா?''

''ஆமா விலை தெளிவா தெரியலை... முன்னூத்தைம்பது ரூபாய்க்கு மேல இருக்கும்ன்னு பாட்டா கடையில் சொன்னாங்க...'

''எக்ஸாக்ட்டா இந்தச் செருப்போட விலை முன்னூத்தி எண்பத்தைந்து ரூபாய் ஐம்பது பைசா... எப்படி சொல்றேன்னு யோசிக்க நீங்களா...? ஸ்டிக்கரின் ஓரத்தில் சில ஆங்கில எழுத்துக்கள் இருக்கு பார்த்தீங்களா...? அது அந்தந்த கடைக்காரர்களுக்கு மட்டுமே தெரிஞ்ச கோட் வேர்ட்... இந்த கோட்வேர்டை வெச்சு செருப்பைக் குறைந்த பட்சம் எவ்வளவு ரூபாய்க்குத் தரலாம்னு கடைக்காரங்களும் அவங்கவங்களுக்குன்னு ஒரு பிரத்யேக கோட் வேர்டு முறையை உபயோகப் படுத்துவாங்க... இந்த ஸ்டிக்கரில் உபயோகப்பத்தியிருக்கும் கோட்வேர்டு என்னோட கடையில் நான் உபயோகப் படுத்தற முறையில் எழுதப்பட்டு இருக்கு...''

''யு மீன்... அந்த கந்தமனோகர்... உங்களோட கோட் வேர்டு முறையைத்தான் உபயோகப்படுத்தறாரா...?''

''ஆமா... காரணம்... நாலஞ்சு வருஷத்துக்கு முன்னால அவன் என் கடையில் ஸேல்ஸ்மேனா வேலை செஞ்சிட்டிருந்தான். தனியா கடை ஆரம்பிச்சு நல்லா மேல வந்துட்டான். கடை நிர்வாகம் பூராவும் என்னோட ஸ்டைல்லதான் பண்றான்... மரியாதையான பையன்... அப்பப்போ வந்து என்னைப் பார்த்துட்டுப் போவான்...''

''அந்த. கந்தமனோகரின் கடை முகவரியைச் சொல்லுங்க...''

அவர் சொல்லச் சொல்ல திவாரி தனது பாக்கெட் நோட்டில் குறித்துக் கொண்டார்.

அடுத்த பத்தாவது நிமிஷத்தில் - கந்தமனோகரின் கடையில் இருந்தார்கள்.

''இந்த செருப்பை நாங்கதான் ஸார் ஸேல் பண்ணினோம்...''



''வாங்கிட்டுப்போன பொண்ணை உங்களுக்கு ஞாபகம் இருக்கா...?''

ப்ரேம்நாத் கேட்டதும் - கந்தமனோகர் ஸேல்ஸ்மேன்களைக் கூப்பிட்டுக் கேட்டார்.

''இந்த பீஸ் யாருப்பா எடுத்துப் போட்டது...?''

அந்த இருபத்தி மூன்று வயது இளைஞன் முன்னால் வந்தான்.

''நான்தான் ஸார்... அந்த கேரி பேக் கேட்டு வந்திருக்காங்களா...?''

''கேரி பேகா...?''

''அந்தப் பொண்ணு கேரி பேகை மறந்து வெச்சிட்டுப் போயிடுச்சு ஸார்... நான் எடுத்து முதலாளி கிட்டே தந்திருக்கேன்...''

கந்தமனோகர் தலையசைத்தார்.

''ஆமா... இந்தப் பையன் ஒரு பேக் கொடுத்தான்.''

திவாரி பரபரத்தார்.

''அந்த பேகைக் குடுங்க...''

கந்தமனோகர் கவுன்ட்டரை நோக்கி செல்ல - ப்ரேம்நாத் இந்த இளைஞனை விசாரித்தார்.

''அந்தப் பொண்ணு எப்படி இருந்தா...?''

''நல்ல ஃபேரா இருந்தது ஸார்...''

''இதுக்கு முன்னால அந்தப் பொண்ணை நீ பார்த்திருக்கியா...? ஐ மீன்... இந்தக் கடைக்கு அந்தப் பொண்ணு ரெகுலர் கஸ்டமரா...?''

''இல்லை ஸார்...''

''செருப்பு வாங்கினதுக்கு பில் போட்டிருப்பீங்களே... இந்த பில்லில் பேரோ அட்ரசோ இருக்கும் இல்லையா...?''

''கஸ்டமர் கேட்டால் ஒழிய பில்லில் பேர் எழுத மாட்டாங்க ஸார்... எங்க அக்கவுண்ட்டிங்காக அயிட்டம் பேரும் விலையும் மட்டும்தான் பில்லில் இருக்கும்...''

அவன் சொன்ன விநாடி -

கந்தமனோகர் அந்த கேரி பேகை எடுத்துக் கொண்டு வந்தார்.

அதை வாங்கி கண்ணாடிக் கேஸின் மேல் அதிலிருந்த பொருட்களைக் கொட்டினார் ப்ரேம்நாத்.

நாப்கின் பொட்டலம் ஒன்று உதிர்ந்தது. அரை டஜன் லேடீஸ் கர்ச்சீப் - ஸ்டாப் வொரியிங் அண்ட் ஸ்டார்ட் லிவிங் - என்ற ஆங்கில புத்தகம். அதைத் தவிர நீள் செவ்வக சைசில் ஒரு சிந்தெட்டிக் விசிட்டிங் கார்டு.

விசிட்டிங் கார்டை ஆர்வத்தோடு கையில் எடுத்தார் பிரேம்நாத்.

ஆர்.பரிமளா.

என்ற பெண்ணின் பெயர் விசிட்டிங் கார்டில் தெரிந்தது.



## 7



**சா**யந்தரம் ஐந்தரை மணி.

தாமோதர் தன்னுடைய பர்சனல் கம்ப்யூட்டரில் பிசினஸ் சம்பந்தமான ஒரு



கடிதத்தை டைப் செய்து முடித்தபோது - இண்டர்காம் அவனைக் கூப்பிட்டது.

ங்...

ங்....

ங்.....

ரிசீவரை எடுத்தான்.

''ஹலோ...''

மறுமுனையிலிருந்து அவன் அப்பா மருதாசலத்தின் குரல் கேட்டது.

''தாமோதர்... பிசியா இருக்கியா...?''

''என்ன விஷயம்...? சொல்லுங்க...''

''நீ உடனே என்னோட ரூமுக்கு வரணும்...''

''என்னப்பா உங்க குரல் ஒரு மாதிரி இருக்கு...? எனி திங் ராங்...?''

''ஆமா தாமோதர்... ஒரு தர்ம சங்கடமான நிலைமை இப்ப உருவாகியிருக்கு...''

''வாட் டூ யு மீன்?''

''ரூமுக்கு வா நான் விபரமா சொல்றேன்...''

தாமோதர் குழப்பத்தோடு ரிசீவரைச் சாத்திவிட்டு பி.சி.யின் மெயின் சுவிட்சை அணைத்தான்.

திரை வெறுமையாகிப் போக - அந்த அறையிலிருந்து வெளியே வந்தான்.

ஹால் டிவியில் சிவகாமி ஒரு பெண்கள் நிகழ்ச்சியை ஆர்வமாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஹாலைக் கடந்து மாடிப் படிகளில் தடதடத்தான் தாமோதர்.

ப்ளஷ் டோர் கதவில் மெலிதாய் சப்தம் எழுப்பினான்.

டொக்...

டொக்...

டொக்...

''கமின் தாமோதர்...''

தட்டியது அவனாகத்தான் இருக்கும் என்று அனுமானத்தோடு குரல் கொடுத்தார் மருதாச்சலம்.

ஹைட்ராலிக் விசையை எதிர்த்துக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே பிரவேசமானான் தாமோதர்.

கண்ணாடியைக் கழற்றி மேஜையின் மேல் வைத்திருந்த மருதாசலம் கவலை இருட்டில் சிக்கியிருந்த முகத்தோடு அவனைப் பார்த்தார்.

''உக்காரு தாமோதர்...''

அவன் அவருக்கு எதிர் இருக்கையை ஆக்ரமித்துக் கொண்டே கேள்விக்குறி பார்வையை வீசினான்.

''என்ன ப்ரச்னை அப்பா...''

''மோனிஷாவோட ஜாதகத்தை நீ கொண்டு வந்தியே... அதில்தான் பிரச்னை...''

அவர் சொன்னதும் - தாமோதரின் முகத்திலும் கவலையின் நிழல்கள் நீளமாய்ப் படர ஆரம்பித்தது.

''அதில் என்ன பிரச்னை...? எங்க இரண்டு பேரோட ஜாதகமும் மேட்ச் ஆகலையா...?''

''மேட்சிங்கில் எந்த பிரச்சனையும் இல்லை... பத்துக்கு ஒன்பது.''



''அப்புறம் என்னப்பா...? மேட்சிங் எப்படி இருக்குமோன்னு பயப்பட்டோம்... எப்படி இருந்தாலும் எனக்குக் கவலை இல்லை... ஆனா அம்மாவோட மனசில் லேசா உறுத்தல் ஏற்படும். அப்படி எதுவும் உறுத்தல் ஏற்பட்டுடக் கூடாதேங்கற பயம்தான் இருந்தது... இப்போ அந்தக் கவலைக்கே இடமில்லாமல் போயிடுச்சு...''

''அதையெல்லாம் தூக்கி சாப்பிடற மாதிரி பெரிய அதிர்ச்சி மோனிஷாவின் ஜாதகத்தில் இருக்கு...''

''விளக்கமா சொல்லுங்கப்பா...''

''உன் மனசை திடப்படுத்திக்க... மோனிஷாவுக்கு ஆயுள் பலம் குறைவா இருக்கு...''

''யூ மீன்...?''

''இன்னும் மூணு மாசம் தான் அவ உயிரோட இருப்பா... கரெக்டா சொல்லப் போனா எண்பத்தெட்டு நாட்கள்... இந்த எண்பத்தெட்டு நாட்களுக்குள் அவளுக்கு எராளமான கண்டங்கள் இருக்கு... அந்த கண்டங்களில் எதிலாவது ஒண்ணில் அவ உயிரை விடப் போறா...''

ஆயிரம் வோல்ட்டேஜ்களில் மின்சாரம் பாய்ந்த மாதிரி நிமிர்ந்தான் தாமோதர்.

''அப்பா...''

''காம்டவுன் தாமோதர்... இங்கே பார்த்தியா... இந்த இடத்தில் ராசிநாதன் நீச்சத்தில் வந்து நிக்கறான்.''

மோனிஷாவின் ஜாதகத்தில் குறிப்பிட்ட இடத்தை சிவப்பு மசியால் வட்டமிட்டுக் காட்டினார் மருதாசலம்.

தாமோதர் பதைபதைப்போடு மறுத்தான்.

''நெவர்... அப்படி இருக்காது... என்னோட மோனிஷா நூறு வருஷம் வாழ்வா... நீங்க சரியா கால்குலேஷன் போடலை... உங்க கால்குலேஷனில் ஏதோ தப்பிருக்கு...''

''உணர்ச்சி வசப்பட்டு கத்தாதே தாமோதர்... நான் காலையிலிருந்து திருப்பித் திருப்பி நூறு தடவையாவது கணக்கை சரி பார்த்துட்டேன்... என்னோட கணிப்பைப் பத்தி உனக்கு நல்லாத் தெரியுமே... நான் என்னிக்குமே கணக்கில் தவறியதில்லை... அடுத்த பிரதமர் யாருங்கறதில் இருந்து....இந்த வருஷம் எப்போவெல்லாம் மழை பெய்யுங் கறது வரை எத்தனையோ கணிப்புகளை முன்கூட்டியே துல்லியமா சொல்லியிருக் கேன்... மோனிஷா நாட்களை எண்ணி கிட்டிருக்காங்கறது கசப்பான உண்மை...''

உறைந்து போய் உட்கார்ந்திருந்த இவனைப் பார்த்துத் தொடர்ந்தார் மருதாசலம்.

''இப்போ நீ உன்னோட கல்யாண விஷயத்தை மறுபரிசீலனை பண்ண வேண்டிய கட்டம் தாமோதர்...''

தட்டென்று நிமிர்ந்தான் தாமோதர்.

''எ... என்ன சொல்றீங்க...?''

''மோனிஷாவைக் கல்யாணம் பண்ணி கிட்டா மூணே மாசத்தில் நீ ஒரு விடோயரா இருப்பே...''

''அதுக்காக...? அதுக்காக...? நோ... நெவர்... இந்த ஹாராஸ்கோப் பிதற்றலுக்காக நான் தடம் புரண்டேன்னா என்னோட காதல் அர்த்தமில்லாதது.... பொய்யானது... மோனிஷா ஒரே ஒரு நாள்தான் வாழ்வாள்ன்னா



கூட நான் அவளை அடுத்த ஒரு மணி நேரத்தில் கல்யாணம் பண்ணிக்க தயாராய் இருப்பேன்...''

''அப்படின்னா மோனிஷா சொற்ப நாட்களில் உயிரை விடப் போற விட்டில் பூச்சின்னு தெரிஞ்சதுக்கப்புறமும் அவளைக் கல்யாணம் பண்ணிகிட்டு உன்னோட வாழ்க்கையைப் பாழாக்கிக்கப் போறியா...?''

''நான் உயிருக்கு உயிரா காதலிக்கிற மோனிஷாவின் வாழ்க்கையே அஸ்தமிக்கப் போகுது... சாகும் போதாவது அவ நிறைஞ்ச மனசோட சாகட்டுமேப்பா... என்னோட முடிவில் எந்த மாற்றமும் இல்லை...''

''தாமோதர்...? ஆர் யூ ஷ்யூர்...?''

''எஸ்... கூடிய சீக்கிரம் மோனிஷாவை நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். ஒருக்கால் உங்க ஜோதிடம் உண்மையா இருந்தா அவளோட கடைசி நாட்களை இனிப்பில் தடவின நிமிஷங்களா மாத்தப் போறேன்...''

''அப்பா... தயவு செஞ்சு நீங்க இந்த விஷயத்தை மோனிஷாகிட்டேயோ... அம்மா கிட்டேயோ சொல்ல வேண்டாம்... அவங்க ரெண்டு பேருமே ரொம்ப எமோஷனலான பெண்கள்... அவங்களால இந்த அதிர்ச்சியான தகவலைத் தாங்கிக்க முடியாது...''

மவுனமாய்த் தலையை மட்டும் அசைத்தார் மருதாசலம்.

விரக்தியில் தோய்ந்த முகத்தோடு தாமோதர் அறையை விட்டு வெளியேற முயன்றபோது பரபரப்பாய் அறைக்குள் நுழைந்தாள் சிவகாமி.

''என்னங்க... என்ன ஆச்சு...?''

அவளைக் குழப்பத்தோடு இருவரும் பார்த்தார்கள்.

''ஏன் சிவகாமி... பதட்டமா வர்றே...?''

''மோனிஷா மனசு நோகும்படி ஏதாவது பேசினீங்களா...?''

''என்ன சொல்றே...?''

''மோனிஷா நம்ம வீட்டுக்கு வந்திருந்தா. நீங்க ரெண்டு பேரும் மேலே பேசிட்டிருக்கிங்கன்னு சொன்னதும்... மேலே வந்தா... வந்த கொஞ்ச நேரத்தில் புடவை முந்தானையால் வாயைப் பொத்தி குலுங்கிக் குலுங்கி அழுதுகிட்டே வீட்டை விட்டே போயிட்டா... என்ன ஏதுன்னு நான் விசாரிச்சுப் பார்த்தேன்... என்கிட்டே கூட சரியா முகம் குடுத்துப் பேசாம கேவிக் கேவி அழுதுட்டே அவ போயிட்டா... நீங்க ரெண்டு பேரும் அவ கிட்டே என்ன சொன்னீங்க...?''

தாமோதர் மருதாசலத்தின் முகத்தை ஊடுருவலாய்ப் பார்த்தான்.

அவர் சலனமில்லாமல் நின்றிருக்க -

உறுமினான்.

''அப்பா... எனக்கு உங்க மேல சந்தேகமா இருக்கு...''

''என்னடா உளர்றே...?''

''வந்து உங்ககிட்டே பேசிக்கறேன்... மோனிஷாவுக்கு மட்டும் ஏதாவது ஆச்சுன்னா நான் உங்களை சும்மா விட மாட்டேன்...''

சொல்லிக் கொண்டே வேகமாய் அந்த அறையை விட்டுப் பாய்ந்தான் தாமோதர்.



வேக ஓட்டத்தில் ஹாலைக் கடந்து போர்டிகோவில் நின்றிருந்த சியர்ராவின் இக்னீஷியனை உசுப்பினான்.

லேசாய்க் கனைத்துவிட்டு எஞ்சின் உயிர் பெற்றது.

ஆக்சிலேட்டரை அழுத்த - ராட்சத வேகத்தில் கார் சாலையைத் தொட்டது.

டயர்கள் தேய திருப்பங்களில் வழுக்கிச் சென்ற கார் - மெயின் சாலை டிராபிக் சிக்னல்களில் திணறியது.

தாமோதர் பொறுமையிழந்த முகத்தோடு காரைச் செலுத்தினான்.

போக்குவரத்தால் இருபது நிமிஷங்கள் தத்தளித்து அந்த மீடியம் ரக டெரஸ் வீட்டின் முன்னால் ஓய்ந்தது கார்.

காரின் கதவைப் படீரென்று திறந்து கொண்டு இறங்கினான் தாமோதர்.

காம்பவுண்ட் கதவின் தாளை விலக்கிவிட்டு விரித்தான்.

எண்ணெய் இல்லாத் கதவு கிறீச்சென்று முனகியது.

முகப்புக் கதவை தொட்டு காலிங் பெல்லை அழுத்தினான்.

ர்ர்ர்ர்ர்ர்...

ர்ர்ர்ர்ர்ர்....

ர்ர்ர்ர்ர்ர்....

ர்ர்ர்ர்ர்....

உள்ளே சப்தம் அலறலாய் சிதறியது.

கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள் அந்தப் பெண். கறுப்பு நிற நைட்டியில் இருந்தாள்.

பெயர் ஹரிணி. மோனிஷாவின் ரூம் மேட். மெல்லிய ஆச்சரியத்தை முகத்தில் காட்டிய படி கேட்டாள்.

"நீங்க... தாமோதர்தானே...?"

"ஆமா..."

"உள்ளே.வாங்க ப்ளீஸ்..."

"மோனிஷா இருக்காளா..."

"இப்பத்தான் போறா..."

"எங்க போறா..."

"வெளியூர் போறேன்னு சொன்னா..."

"எந்த ஊருக்குன்னு தெரியுமா..."

"தெரியலை... ஆட்டோவில் வந்து இறங்கினா... வர்றப்பவே ரொம்ப டென்ஷனா இருந்தா... அவசர அவசரமா சூட்கேசில் ட்ரஸ்களை அடுக்கிட்டு அவசர வேலையா வெளியூர் போறேன்னு சொல்லிட்டுக் கிளம்பிப் போயிட்டா..."

தாமோதர் கவலையும், குழப்பமுமாய் நின்றிருந்த வினாடி - உள்ளே இருந்து இன்னொரு ரூம் மேட் பரபரப்போடு ஓடி வந்தாள்.

"ஹரிணி... ஹரிணி..."

"என்னாச்சுடி...? ஏன் கத்தறே..."

"ஹாஸ்பிட்டல், வேலையா வெளியூர் போறேன்னு மோனிஷா நம்ம கிட்டே பொய் சொல்லியிருக்காடி..."

"என்ன சொல்றே...?"

"அவளுக்கு என்னவோ ப்ராப்ளம்... எனக்கும் உனக்கும் லெட்டர் எழுதி வெச்சிருக்கா..."



சொல்லிக் கொண்டே அந்தக் கிறுக்கலான கடிதத்தை நீட்டினாள்.

*அன்புள்ள ஹரிணி, ரமா!*

நான் நிரந்தரமா உங்களை விட்டுப் பிரிகிறேன். என்னை யாரும் தேட வேண்டாம். இத்துடன் எனது உயிரின் உயிரான தாமோதர்க்கு கடிதம் வைத்துள்ளேன். அதை அவரிடம் சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிரியா விடை பெறும்

மோனிஷா.

ஒட்டப்பட்ட சிறிய கவர் ஒன்றும் அந்தக் கடிதத்துடன் சேர்த்துப் பின் செய்யப் பட்டிருந்தது. அதன் மேலே தாமோதர் என்று பட்டையாய் எழுத்துக்கள்.

அந்தக் கவரை வாங்கி அவசரமாய் அதன் வாயை உடைத்தான் தாமோதர்.

*என் பிரியமுள்ள தாமோதர்!*

நம் கல்யாணம் முடிவாகி விட்ட சந்தோஷத்தில் ஒரு எதிர்பாராத சந்திப்பாக இருக்கட்டும் - என்று எண்ணி இன்று திடீரென்று உங்கள் வீட்டுக்கு வந்தேன். ஆனால் கடவுள் உண்மையிலேயே அதை எதிர்பாராத சந்திப்பாகத்தான் ஆக்கிவிட்டார். என் ஜாதகத்தைக் கணித்து அங்கிள் கூறியதை நான் கேட்டுவிட்டேன். அதைத் தொடர்ந்து காதலில் உறுதியாய் இருந்த உங்கள் அற்புத மான இதயத்தையும் உணர்ந்து கொண்டேன். என் மேல் நீங்கள் வைத்திருக்கும் அளவிட முடியாத பிரியத்தை உணர்ந்த பரவசமே மீதமிருக்கும் என் மூன்று மாத வாழ்நாளுக்குப் போதுமானது. நீங்கள், அங்கிள், அத்தை

மூன்று பேருமே மனிதர்களில் ஜெம். என்னால் உங்கள் சந்தோஷம் பாழாவதை நான் விரும்பவில்லை. வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு நீங்கள் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்பதே என் பிரார்த்தனை. தயவு செய்து என்னைத் தேட வேண்டாம். எந்த ஊருக்குச் சென்றாலும் எனக்கு வேலை கிடைக்கும். இந்த மூன்று மாதங்களை நான் அமைதியாகக் கழிக்க விரும்புகிறேன்.

அதிர்ஷ்டமிருந்தால் அடுத்த ஜென்மத்திலாவது உங்களின் மனைவியாகத் துடிக்கும்

மோனிஷா.

கடிதத்தைப் படித்து முடித்த தாமோதர் வாய்விட்டு அலறினான்.

"மோனிஷா..."

அவனுக்குள் பீறிட்ட கவலை கோபமாக உருமாறி மருதாச்சலத்தின் மேல் மையம் கொண்டது.



# 8



போலீஸ் ஜீப் வேகத்தோடு விரைந்து கொண்டிருக்க - ப்ரேம்நாத் திவாரியிடம் திரும்பிச் சொன்னார்.

"விசிட்டிங் கார்டிலிருந்த பரிமளாங்கிற பொண்ணு ஒரு சைக்கியாட்ரிஸ்ட்...?"

"ஆமா ஸார்... பேருக்குப் பின்னால போட்டிருக்கிற பட்டத்தைப் பார்த்தா அப்படித்தான் தெரியுது..."



"செத்துப் போன பொண்ணு ஏதாவது காரணத்துக்காக அந்த சைக்கியாட்ரிஸ்ட் கிட்டே போயிருக்கலாம்... அல்லது கொலையாகிக் கிடப்பதே அந்த சைக்கியாட்ரிஸ்ட்டா கூட இருக்கலாம்..."

"எஸ் ஸார்... இப்போ நாம அந்த விசிட்டிங் கார்டிலிக்கிற விலாசத்துக்குப் போனா ஒரு தெளிவான அவுட் லைன் கிடைக்க வாய்ப்பிருக்கு..."

"இந்திரா நகர் செக்கண்ட் க்ராஸ் தானே..."

"எஸ் ஸார்... டோர் நம்பர் நாப்பத்தி நாலு..."

ஜீப் எல்.பி.ரோட்டின் நெரிசலுக்குள் ஊர்ந்து வலதுபுறம் திரும்பியது. கிளைச் சாலைகளுக்குள் அங்குமிங்கும் திரும்பி அந்த விலாசத்தைத் தொட்டது.

கோபி கரைந்து கறுப்படித்துப் போன காம்பவுண்ட் சுவர்.

வீட்டுக்கு முன்னால் கொய்யா மரம் பிரம்மாண்டமாய் கிளை பரப்பியிருந்தது. முகப்புச் சுவரில் பெரிய போர்டு.

ஆர்.பரிமளா.

மனநல மருத்துவர்.

இருவரும் உள்ளே சென்றார்கள்.

காலிங் பெல்லை அழுத்திவிட்டு காத்திருக்க - சொற்ப நிமிஷங்களுக்கு பின் காலடி ஓசை கேட்டது.

காலடி ஓசை கதவை நெருங்கிய பிறகு கதவின் பக்கவாட்டிலிருந்து ஜன்னல் வழியாக குரல் மட்டும் வெளிப்பட்டது.

''பதினொரு மணிக்குத்தான் அம்மா பேஷண்ட்ஸை பார்ப்பாங்க... போய்ட்டு அப்புறமா வாங்க...''

நகர எத்தனித்த அந்த வேலைக்காரப் பெண்மணியை அவசரமாய்க் கூப்பிட்டு நிறுத்தினார் ப்ரேம்நாத்.

''ஒரு நிமிஷம் நில்லு... நாங்க பேஷண்ட்ஸ் இல்லை.. போலீஸ்... ஒரு விசாரணைக்காக டாக்டரைப் பார்க்க வந்திருக்கோம்... அவங்களை உடனே நாங்க பார்க்கணும்...''

அவள் ஜன்னல் வழியே நன்றாக எட்டிப் பார்த்து அவர்களின் காக்கி யூனிபார்ம்களைக் கண்ணில் வாங்கிக் கொண்டு சற்றே அவசரமாய்ப் பதில் சொன்னாள்.

''கொஞ்சம் இருங்க நான் டாக்டரம்மாவைக் கேட்டுட்டு வந்து சொல்றேன்...''

மேலும் சில நிமிஷங்கள் காத்திருந்த பின்பு - கதவு திறந்தது.

''உள்ளே வந்து உட்காருங்க...''

வேலைக்காரப் பெண்மணி சோபாவைத் தட்டிவிட்டுப் போனாள்.

இருவரும் சோபாவில் அமர்ந்தார்கள்.

ப்ரேம்நாத் திவாரியை ஏறிட்டார்.

''ஸோ... டாக்டர் இருக்காங்க... அந்தப் பொண்ணு இவங்ககிட்டே ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிறதுக்காக வந்திருக்கலாம்...''

''சைக்கியாட்ரிஸ்ட் கிட்டே ட்ரீட்மெண்ட் எடுத்துக்கறான்னா அவ மரை கழண்ட கேஸா ஸார்...?''



திவாரி கேட்க - சட்டென்று மறுத்தார் ப்ரேம்நாத்.

''மரை கழண்ட கேஸுங்கதான் சைக்கியாட்ரிஸ்ட் கிட்டே போவாங்கன்றது தப்பான அபிப்ராயம் திவாரி... இன்னிக்கெல்லாம் டிப்ரஷன்... கவலை... மன அழுத்தம்... மனக்குழப்பம்ன்னு பல சாதாரணப் பிரச்சனைகளுக்காக சைக்கியாட்ரிஸ்ட்ஸ் கிட்டே போறவங்க நிறையப் பேர் இருக்காங்க...''

''அப்படின்னா அந்தப் பொண்ணு ஏதோ மனப் போராட்டத்தில் இருந்திருக்கா...''

''மே பி...''

''மே பின்னு சொல்றீங்களே... வேற பாசிபிலிட்டீஸ் இருக்கா...?''

''இருக்கு... அவ தனக்காக டாக்டர் கிட்டே வராம வேற யாரையாவது கூட்டிட்டு வந்திருக்கலாம்... அல்லது டாக்டருக்குத் தெரிஞ்ச பொண்ணா இருக்கலாம்... டாக்டரோட உறவுக்காரியா இருக்கலாம்...''

''இத்தனை பாசிபிலிட்டீஸ் இருக்கறப்போ டாக்டரால எப்படி ஐடெண்ட்டிபை பண்ண முடியும்...?''

''சமீபத்தில் யாருக்கெல்லாம் கார்டு கொடுத்தாங்கன்னு அந்தம்மாவை ஞாபகப்படுத்தி சொல்லச் சொல்லலாம்... அந்த லிஸ்ட்டில் கொலையாகியிருக்கும் பெண்ணின் ஏஜ் க்ரூப்பில் யாராவது இருந்தா சம்பந்தப்பட்ட பெண் கிட்டே விசாரணையைத் தொடரலாம்...''

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது பர்ப்யூம் வாசனையோடு காட்டன் புடவை

சரசரக்க அங்கே வந்தாள் டாக்டர் பரிமளா. முப்பத்தைந்து வயது என்று சொல்ல முடியாதபடி ப்யூட்டி பார்லரின் உபயத்தில் ஸ்லிம்மாக இருந்தாள்.

''என்னோட ரூமுக்கு வாங்க இன்ஸ்பெக்டர்...''

சொல்லிக் கொண்டே வலதுபுறம் இருந்த அறைக்குள் அவர்களைக் கூட்டிச் சென்றாள்.

ப்ராக்டீஸ் செய்யக்கூடிய அறை.

ஷெல்புகளில் மருந்துப் புட்டிகள் ப்ளட் லைட்டோடு ஒரு பரிசோதனை மேஜை. சைக்கியாட்ரிக் டெஸ்ட்களுக்கான சார்ட்டுகள் சில சுவரில் தொங்கிக் கொண்டிருந்தன. சுற்றுச் சுவர்களில் நீல வர்ண பெயிண்ட் அடிக்கப்பட்டிருக்க - அதே நிறத்தில் வெளிப்பட்ட ப்ளோரஸண்ட் விளக்கின் வெளிச்சம் உள்ளே இருப்பவர்களின் மனநிலையை ஏதோ ஒரு விதத்தில் பாதித்துக் கொண்டிருந்தது.

பரிமளா இருவரையும் ஏறிட்டுப் பொதுவாகக் கேட்டாள்.

''ஏதாவது கன்சல்ட்டன்சிக்காக வந்திருக்கீங்களா...?''

''நோ... நோ... சின்ன விசாரணை...''

''எது சம்பந்தமா...?''

''ஒரு கொலை கேஸ் சம்பந்தமா உங்ககிட்டே விசாரிக்கணும்...''

''யார் கொலையானாங்க...? எனக்கும் அந்தக் கொலைக்கும் என்ன சம்பந்தம்...?''

''டோன்ட் மிஸ்டேக் மி... கொலையோட உங்களை நான் தொடர்புபடுத்தலை... அடையாளம் தெரியாத ஒரு பெண்ணின்



பிணம் ரயில்வே ட்ராக்கிற்கு பக்கத்தில் கிடைச்சிருக்கு... கொலை செய்யப்பட்ட பெண் கிட்டே உங்களோட விசிட்டிங் கார்டு இருப்பதை ஃபார்தர் இன்வெஸ்டிகேஷனில் கண்டுபிடிச்சோம்... இது உங்க விசிட்டிங் கார்டுதானே...?''

அந்தக் கார்டைத் தூக்கி மேஜையில் போட்டார் திவாரி.

பரிமளா திகைப்புடன் அந்தக் கார்டைப் பார்த்தபடியே சொன்னாள்.

''இது என்னோட விசிட்டிங் கார்டுதான்... அந்தப் பொண்ணுகிட்டே இருந்ததா...?''

''ஆமா... அவள் யாரு... என்னங்கிற விபரம் எங்களுக்குத் தெரியணும்...?''

''அந்தப் பொண்ணோட போட்டோ இருந்தாக் குடுங்க... நான் என்னோட பேஷண்ட்டான்னு பார்த்துச் சொல்றேன்...''

''கொலையாளி அடையாளம் தெரியாதபடி முகத்தைச் சிதைச்சிட்டான்...''

''மை குட்னஸ்... அப்புறம் எப்படி அவ யாருன்னு கண்டுபிடிக்கறது...?''

''சமீபத்தில் நீங்க யாருக்கெல்லாம் விசிட்டிங் கார்டு கொடுத்திருக்கீங்கன்னு ஞாபகப்படுத்தி சொன்னீங்கன்னா பரவாயில்லை...''

''அதை எப்படிச் சொல்ல முடியும்...? என்னை சந்திக்கிற நண்பர்கள்... பேஷண்ட்ஸ்... ரிலேட்டிவ்ஸ் எல்லாருக்குமே நான் கார்டு கொடுக்கிறேன்...''

''கொலையான பெண்ணுக்கு இருபதில் இருந்து இருபத்திரண்டு வயசுக்குள்தான்

இருக்கும்... அந்த ஏஜ் க்ரூப்பில் உள்ளவங்க யாராவது சமீபத்தில் உங்ககிட்டே கன்சல்ட் பண்ண வந்தாங்களா...?"

"ஒன் செக்கண்ட்... பி.சி.ல... பார்த்துச் சொல்றேன்..."

பரிமளா தனது மேஜையிலிருந்த கம்ப்யூட்டருக்கு உயிர் கொடுத்தாள்.

ஒரு சில நிமிஷங்கள் திரையைப் பார்த்துக் கொண்டிருந்தவள் உதட்டைப் பிதுக்கினாள்.

"நீங்க சொல்ற மாதிரி யாரும் என்கிட்டே ட்ரீட்மெண்ட் எடுக்கவோ கன்சல்ட் பண்ணவோ வரலையே... ஒரு வேளை அந்தப் பொண்ணு யாரையாவது கூட்டிட்டு வந்திருக்கலாம்... அல்லது லயன்ஸ் க்ளப் மீட்டிங்... ரோட்டரி க்ளப் மீட்டிங்... இந்த மாதிரி இடங்களில் என்னை சந்திச்சுப் பேசியிருக்கலாம்... எனக்கு சரியா நினைவில்லை இன்ஸ்பெக்டர்..."

ஏமாற்ற முகங்களோடு எழுந்தார்கள் ப்ரேம்நாத்தும், திவாரியும்.

"ஒக்கே டாக்டர்... ஒருவேளை இந்தப் பொண்ணா இருக்குமோன்னு உங்களுக்கு ஞாபகம் வந்தா உடனே எங்களுக்கு ரிங் பண்ணுக... உங்க மூலமா கேஸுக்குள் போக ப்ரேக் த்ரு கிடைக்கும்ன்னு நம்பிக்கையோட வந்தோம்..."

"ஸாரி இன்ஸ்பெக்டர்... உங்களுக்கு உதவ முடியாமப் போனதை நினைக்கிறப்போ எனக்கும் வருத்தமாத்தான் இருக்கு..."

"இட்ஸ் ஆல் ரைட்..."

தலையசைத்துவிட்டு அங்கிருந்து வெளியேறினார்கள்.



ஜீப்புக்கு வந்தவுடன் ப்ரேம்நாத் சொன்னார்.

"திவாரி... நாம கொண்டு வந்த விசிட்டிங் கார்டை டாக்டர் கிட்டே காட்டினோமே... திரும்ப எடுத்துக்கிட்டீங்களா...?"

சொல்லிக் கொண்டே உள்ளே சென்ற திவாரி பரிமளாவின் அறையை நெருங்கிய போது சட்டென்று நின்றார்.

உள்ளே பரிமளா போனில் பேசிக் கொண்டிருந்தாள்.

குரலில் பதட்டம் இருந்தது.

"ஆமாங்க... இப்ப கொஞ்சம் முன்னாடி போலீஸ் வந்திருந்தாங்க..."

"...."

"அவளைக் கொலை பண்ணிட்டாங் களாம்..."

"...."

"நான் எனக்குத் தெரியாதுன்னு சொல்லிட்டேன்..."

"...."

"சரிங்க..."

டொக்.

அவள் ரிசீவரை சாத்தி விட்டு நிமிர திவாரி அவள் எதிரே வந்து நின்றார்.

கோபக் குரலை வெளியிட்டார்.

"டாக்டர்... உங்களுக்கு அந்தப் பொண்ணைத் தெரிஞ்சிருக்கு. தெரிஞ் சிருந்தும் எங்க கிட்டே ஏன் மறைச்சீங்க...?"

டாக்டர் பரிமளா எச்சில் விழுங்கிக் கொண்டே - அவரைப் பார்த்தாள்.



# 9



பங்களாவின் அகலமான கிராதி கேட்டின் முன்னால் டயர்களைத் தேய்த்துக் கொண்டு நின்றது கார்.

பலமாய் ஹார்னை அலற விட்டான் தாமோதர். கூர்க்கா ஓடி வந்து கதவைத் திறக்க - ஆக்ஸிலேட்டரை அழுத்தி எஞ்சினைக் கதற விட்டு ஒரு குட்டிப் புயலைப் போல போர்டிகோவில் போய்க் காரை புதைத்தான்.

பட்டென்று கதவை அறைந்து சாத்திவிட்டு படிகளில் தடதடத்தான்.

ஹாலில் பிரவேசித்தபோது -

பதட்டமான முகங்களோடு சிவகாமியும், மருதாசலமும் உட்கார்ந்திருந்தார்கள்.

அவனைப் பார்த்ததும் மருதாசலம் கேட்டார்.

"என்னாச்சுடா...? மோனிஷாவைப் பார்த்தியா..."

"கடைசியில் நீங்க நினைச்சபடியே நடந்துடுச்சு... மோனிஷா இந்த ஊரை விட்டே கிளம்பிப் போயிட்டா..."

"என்னடா சொல்றே...?"

"அவளை வேண்டாம்ன்னு நேரடியா சொன்னா நான் ஏதுக்க....மாட்டேன்னு ஜாதகம்... அது இதுன்னு காரணம் காட்டி அவளை விரட்டி அடிச்சிட்டீங்க..."



"தாமோதர்... முட்டாள்த்தனமா பேசாதே... நாம பேசிகிட்டதை அவ ஏதேச்சையா கேட்டுட்டா. அதுக்காக நான் என்ன செய்ய முடியும்? இது எதிர்பாராம நடந்தது..."

"அவ இன்னும் மூணு மாசம்தான் உயிரோட இருப்பாள்ன்னு சொன்னா நான் மனசு மாறிடுவேன்னு எதிர்பார்த்தீங்க... நான் அப்படி மாறலை... அதுக்கு முன்னால மோனிஷா காதுக்கு விஷயம் போயி... இப்போ... அவ... அவ..."

கலங்கிப் போன முகத்தோட அவளுடைய கடிதத்தை நீட்டினான்.

மருதாசலம் அதை வாங்கினார்.

கண்ணாடியை சரியாய்ப் பொருத்திக் கொண்டு கடிதத்திலிருந்த மோனிஷாவின் கையெழுத்தின் மேல் பார்வையை நகர்த்த ஆரம்பித்தார்.

சிவகாமி எட்டிப் பார்த்தாள்.

கடிதத்தை ஊன்றிப் படித்த மருதாசலம் நிமிர்ந்தார்.

"தாமோதர்... உங்களைப் பிரிக்கணும்ங்கற எண்ணத்தில் நான் பலனைச் சொல்லலை... ஹாரஸ்கோப்பைப் பார்க்கணும்ன்னு அவளாகத்தான் இஷ்டப்பட்டா... அந்த ஹாரஸ்கோப்பை நான் கணிச்சதில் எந்தத் தப்பும் இல்லை... ஹாரஸ்கோப்புப்படி இன்னும் மூணு மாசம்தான் மோனிஷா உயிரோட இருக்கப் போறாள்ங்கறதை நான் கற்பூரம் அடிச்சி சொல்ல முடியும்... இந்த நிலைமையிலும் நீ அவளைக் கல்யாணம் பண்ணிக்கத் தயாரா இருந்தா பண்ணி வைக்க நானும் தயார்தான்... உன்னோட வாழ்க்கையை வீணாக்க வேண்டாம்ங்கற நல்ல

எண்ணத்தில் மோனிஷாவே இந்த ஊரை விட்டுப் போயிட்டா... அது அவளோட நல்ல மனசைக் காட்டுது... இந்த விஷயத்தில நீ என் மேல கோபப்படறதை கொஞ்சம் கூட என்னால ஏத்துக்க முடியாது..."

"நீங்க ஹாரஸ்கோப்பைப் பார்த்ததால வந்த வினைதானே அத்தனையும்...?"

"டோன்ட் பி சில்லி... அவ பிரிஞ்சி போயிட்ட வருத்தத்தில் கவலையிலும் நீ ஏமோஷனா இருக்கே... அந்த எமோஷனில் என்ன பேசறேன்னே தெரியாம பேசிட்டிருக்கே..."

சிவகாமி கலங்கிய கண்களோடு சொன்னாள்.

"தாமோதர்... உங்கப்பா யார் மனசையும் நோகடிக்கத் தெரியாதவர்ப்பா... அவர் மேலே அபாண்டமா குற்றம் சாட்டறியே...?"

மருதாசலம் குரல் தழுதழுத்தார்.

"வளர்த்த கடா என்னிக்கு" இருந்தாலும் ஒரு நாள் மார்பில் பாயத்தானே செய்யும் சிவகாமி..."

சொல்லிக் கொண்டே தாமோதரிடம் திரும்பியவர் மெல்லிய குரலில் சொன்னார்.

"இங்கே பாரு தாமோதர்... உனக்கு என் மேல் நம்பிக்கை இல்லைன்னா நான் உனக்காக இன்னும் ஒரே ஒரு முயற்சி செய்ய முடியும்..."

"போலீஸ் டிபார்ட்மெண்ல் ஐ.ஜி. லெவல்ல எனக்குத் தெரிஞ்சவங்க இருக்காங்க... விஷயத்தை நான் அவங்க காதில் போட்டு வெக்கறேன்... எனக்கு நிச்சயமா உதவி செய்வாங்க... எப்படியாவது



இந்த மூணு மாசத்துக்குள்ளே அவளைக் ண்டுபிடிச்சு அவ கழுத்தில் உன்னைத் தாலி ட்ட வெக்கறேன்... போதுமா...?"

சொன்னவரை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவர் அப்போதே போன் ரிசீவரை எடுத்து பொத்தான்களை அழுத்த ஆரம்பித்தார்.



## 10



திவாரி திரும்பி வருவதில் தாமதம் ஆகவே ப்ரேம்நாத்தும் அங்கே வந்துவிட்டார்.

"என்னாச்சு திவாரி...? விசிட்டிங் கார்டு எடுத்துக்கிட்டு வர இவ்வளவு நேரமா...?"

திவாரி புன்னகைத்தார்.

"விசிட்டிங் கார்டை மட்டும் எடுத்துட்டு வர்றதா இருந்தா நான் அப்பவே வந்திருப்பேன். இந்த டாக்டர் கிட்டே இன்னும் கொஞ்சம் விசாரிக்க வேண்டியிருந்தது ஸார்... அதனாலதான் லேட் ஆயிடுச்சு..."

"என்ன சொல்றீங்க...? இவங்க கிட்டே இன்னும் என்ன விசாரிக்கணும்...?"

"அதை நீங்க அவங்ககிட்டேயே கேளுங்க ஸார்..."

ப்ரேம்நாத் பரிமளாவின் முகத்தைப் பார்த்தார்.

"டாக்டர்... திவாரி என்ன சொல்றார்...?"

பரிமளா திணறலாய் அவருக்கு பதில் சொன்னாள்.

''ஸ...ஸாரி... இன்ஸ்பெக்டர்... நான் உங்ககிட்டே ஒரு உண்மையை மறைச்சிட்டேன்...''

''வாட் டூ யு மீன்...?''

''அந்தப் பொண்ணை எனக்குத் தெரியும்... ஆனா நீங்க கேட்டப்ப நான் ஞாபகமில்லைன்னு சொல்லிட்டேன்... ஆனா நீங்க போனதுக்கப்புறம் என்னோட கணவர் கிட்டே போனில் பேசறப்போ சப்-இன்ஸ் பெக்டர் திவாரி வந்துட்டார்...''

''அந்தப் பொண்ணைப் பத்தித் தெரிஞ்சிருந்தும் நீங்க ஏன் மறைச்சிங்க...? அப்படின்னா உங்களுக்கு அந்தக் கொலையில் தொடர்பு இருக்கா...?''

பரிமளா அவசரமாய் மறுத்தாள்.

''நோ...நோ...''

''பின்னே ஏன் மறைச்சீங்க...?''

''விசாரணை அது இதுன்னு வந்து கோர்ட்... கேஸ்ன்னு அலையவே நேரம் சரியா இருக்கும்... தொழிலைப் பார்க்க முடியாது... யார் என்ன கேட்டாலும் எனக்குத் தெரியாதுன்னு சொல்லிடு... அதுதான் நல்லதுன்னு என்னோட ஹஸ்பெண்ட் அட்வைஸ் பண்ணினார்...''

''என்ன மேடம்...படிச்ச டாக்டர் நீங்களே இப்படிக் கன்சர்வேட்டிவ்வா இருக்கலாமா...? உங்க டாக்டர் தொழிலுக்கு எந்த வகையிலும் நாங்க இடைஞ்சல் தரப் போறதில்லை... அந்தப் பொண்ணு யாரு.... அவளைப் பத்தி உங்களுக்குத் தெரிஞ்ச விபரங்கள் என்ன... இதையெல்லாம் சொல்லி விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுங்க... விஷயங்களை



...றைக்கறது குற்றத்துக்கு உடந்தையா ...ருக்கறதுக்கு சமானம்...''

அந்தப் பரிமளா பயந்த பார்வையோடு ...சான்னாள்.

''இன்ஸ்பெக்டர்... தயவு செய்து நீங்க ...ன்னை சந்தேகப்பட வேண்டாம்.... அந்தப் ...பாண்ணு என்கிட்டே கன்சல்ட் ...ண்ணிட்டுப் போறதுக்காக வந்தவள்...''

''அவளுக்கு ஏதாவது மெண்ட்டல் ...ராப்ளம் இருந்ததா...?''

''மனசில் குழப்பம் இருந்தது... ...ற்கொலை பண்ணிக்கற ஆட்டிட்யூடோட ...ருந்தாள்... தற்கொலை பண்றது கோழைத் ...னம்... எவ்வளவு பெரிய பிரச்சனை ...ந்தாலும் எதிர் நீச்சல் போடணும்... அதுதான் ...ாழ்க்கை... இப்படியெல்லாம் நிறைய ...ட்வைஸ் பண்ணி நான்தான் அவ மனசை ...ாத்தினேன்... தற்கொலை எண்ணத்தை ...வள் கைவிட்டுட்டாள்... ஆனா ...ரச்சனையை சமாளிக்க நான் சொல்லிக் ...காடுத்த ஒரு யோசனையே அவள் ...ாழ்க்கையைப் பாழாக்கும்ன்னு நான் ...னவிலும் நினைக்கலை...''

''நீங்க சொல்றது எதுவுமே புரியலையே? ...புத்தி நிதானமா விஷயங்களைச் ...சால்லுங்க... யார் அந்தப் பொண்ணு...? ...தை முதல்ல சொல்லுங்க...''

''அந்தப் பொண்ணு பேர் ஜோதி... ...வஸ்ட் மாம்பலத்தில் இருந்து வர்றதா ...சால்லுவா...?''

''வொர்க்கிங் விமனா...?''

''ஆமா... ஒரு ப்ரைவேட் கன்சர்ன்ல ...ப்ஷனிஸ்ட்...''

''என்ன ப்ராப்ளத்துக்காக உங்க கிட்டே
வந்தா....''

''அவ தாமோதர்ன்னு ஒரு பூத்தை
காதலிச்சிட்டு வந்திருக்கா...''

''தாமோதர்...?''

''ஆமா...''

''அந்த தாமோதர் அவளைக் காதலிச்
வனா...?''

''அவனும் இவளை லவ் பண்ண
யிருக்கான்... அவன் ஒரு பெரிய பணக்காரன்
சின்சியரா காதலிச்சிட்டு வந்தவன் திடீர்ன்னு
தன்னை விட்டு கொஞ்சம் கொஞ்சமா விலகி
போறதை உணர்ந்திருக்கா... இவனை விட்டு
விலகிப் போய் யாரோ ஒரு நர்ஸ் கிட்டே
நெருங்கிப் பழக ஆரம்பிச்சிட்டான்னு
உறுதியா தெரிஞ்சுட்டா... அது தெரிஞ்
பிறகு எதிர்த்துப் போராடறதுக்குப் பதில்
தற்கொலை எண்ணங்கள் அவளுக்குப் பர
ஆரம்பிச்சிடுச்சு... நல்ல வேளையா அ
படிச்ச பெண்ணாக இருந்ததால ஒ
சைக்கியாட்ரிஸ்ட்டை சந்திச்சு இதைப்பத்தி
பேசிப் பார்க்கலாம்ன்னு முடிவு எடுத்
என்கிட்டே வந்திருக்கா... நான் அவளுக்கு
மனோ தைரியத்தை ஊட்டி எதிர்த்து
போராடற மனோ நிலைக்கு அவளைத் தயா
படுத்தினேன்.''

''தாமோதரை எதிர்த்து அவள் போரா
கொடி தூக்கினதும் நர்ஸ் மேல இருந்
மோகத்தில் ஜோதியைத் தீர்த்து
கட்டிட்டானா...?''

''இல்லை இன்ஸ்பெக்டர்... நேருக்கு நே
போய் குழாயடி சண்டை நடத்தற மாதிரி ஒ
யோசனையை நான் சொல்லித் தரலை...''



''பின்னே...?''

''பணக்காரனுக்கு எப்பவுமே பணத்தின்
மேல் குறி இருக்கும்... இந்த சைக்காலஜியின்
அடிப்படையில் ஜோதிக்கு நான் ஒரு
யோசனை சொன்னேன்.... அது நல்லாவே ஓர்க்
அவுட் ஆயிடுச்சு...''

''என்ன யோசனை சொன்னீங்க...?''

''ரொம்ப நாளா கோர்ட்டில் இழுபறி
ஆகிட்டிருந்த அறுபது லட்சம் மதிப்புள்ள ஒரு
பரம்பரை ப்ராப்பர்ட்டி எங்களுக்கே
கிடைக்கணும்ன்னு தீர்ப்பாகியிருக்குன்னு
அவன் கிட்டே போய் சொல்லச் சொன்
னேன்...''

''அப்படி சொன்னதுக்குப் பலன்
இருந்ததா...?''

''ஆமா... அந்த தாமோதரின் கவனம்
மறுபடியும் இவளிடம் திரும்பியிருக்கு... என்
கிட்டே வந்து தாங்க்ஸ் சொல்லிட்டுப்
போனா.... கூடிய சீக்கிரம் என்னைக்
கல்யாண[illegible] பண்ணிக்கறேன்னு சொல்லிட்
டார்... [illegible]ன்னு சந்தோஷப்பட்டா... இந்தப்
பாய் [illegible] கல்யாணம் முடியற வரைக்கும்
மயி[illegible]டெயின் பண்ணிக்கன்னு சொல்லி
அவளை வாழ்த்தி அனுப்பினேன்...''

''இடையில் என்ன குளறுபடி ஆச்சு...?''


''அந்த சொத்து விவகாரம் பொய்ன்னு
அவனுக்குத் தெரிஞ்சுடுச்சு...ரொம்பவும்
ஆத்திரமாயிட்டான்... உன்னை சும்மா விட
மாட்டேண்டின்னு போன்ல கூப்பிட்டு
மிரட்டியிருக்கான்... ஜோதி, என்கிட்டே இந்த
விஷயத்தை சொல்லிட்டா... தாமோதர் என்ன
செய்வான்னு தெரியலை... ரொம்பவும்

ஆவேசத்தோட இருக்கான்.... எப்படி அவனை சமாளிக்கறதுன்னு தெரியலைன்னு சொன்னா அதுக்கப்புறம் அவகிட்டே இருந்து எந்த தகவலுமே இல்லை... அவ தங்கியிருந்த லேடீஸ் ஹாஸ்டலுக்கு ஒரு தடவை நான் போன் பண்ணக் கேட்டப்ப... எந்தத் தகவலும் இல்லாம காணாமப் போயிட்டா... போலீசில் கம்ப்ளைண்ட் பண்ணியிருக்குன்னு சொன்னாங்க... அந்த தாமோதர்தான் அவளை என்னவோ செஞ்சிருக்கணும்ன்னு எனக்கு அப்பவே தெரிஞ்சிடுச்சு... என்னோட கணவர் கிட்டே இதைப் பத்தி சொன்னப்ப... இதைப் பெரிசு படுத்தி நீயே வம்பை விலைக்கு வாங்காதே... யார் என்ன கேட்டாலும் எனக்குத் தெரியாதுன்னு சொல்லி ஒதுங்கிக்கோ...ன்னு அட்வைஸ் பண்ணினார்..."

"அந்த தாமோதர் யாரு. என்னன்னு உங்களுக்குத் தெரியுமா...?"

"பிரபல அஸ்ட்ராலஜிஸ்ட் மருதா சலத்தின் மகன்னு ஜோதி என்கிட்டே சொல்லியிருக்கா."

ப்ரேம்நாத்தும், திவாரியும் சுறுசுறுப்பாய் எழுந்தார்கள்.




பங்களா கேட்டுக்குள் வேகமாய் பிரவேசித்தது ஜீப்.

போர்டிகோவிற்கு அருகே இயக்கத்தை நிறுத்தினார் ப்ரேம்நாத்.



முகப்புச் சுவரில் அப்பியிருந்த காலிங் பெல் சுவிட்சை அழுத்திவிட்டுக் காத்திருந் தார்கள்.

எலக்ட்ரானிக் இசை வெகு நீளமாய் வீட்டுக்குள் பரவியது.

சொற்ப நேரம் கழித்து சிவகாமி ஹாலுக்கு வந்தாள்.

காக்கி யூனிபார்ம்களைக் கண்ணில் வாங்கி லேசாகப் புருவங்களைச் சுருக்கிய படியே கேட்டாள்.

"யாரு வேணும்...?"

"அஸ்ட்ராலஜிஸ்ட் மருதாசலத்தின் வீடுதானே இது...?"

"ஆமா..."

"அவரோட சன் தாமோதரை நாங்க பார்க்கணும்..."

"என்ன விஷயம்...?"

"ஒரு சின்ன விசாரணை..."

"அவன் வெளியூர் போயிருக்கான்..."

"எந்த ஊருக்கு...?"

"ஆந்திரா..."

"ஆந்திராவில் எங்கே...?"

"அங்க வராங்கல்ன்னு ஒரு இடம்..."

"அங்கே எதுக்காகப் போயிருக்கார்...?"

"சொந்த வேலையாப் போயிருக்கான்..."

"என்ன வேலை...?"

ப்ரேம்நாத் கேட்டதும் - லேசான எரிச்சலோடு அவரைப் பார்த்தாள் சிவகாமி.

''அதான் சொந்த வேலைன்னு
சொல்றேனே...''

ப்ரேம்நாத் அவளை ஏறிட்டு நிதானமா
குரலில் சொன்னார்.

''இங்கே பாருங்கம்மா... நாங்க ரொம்
ஸீரியசான மேட்டரோட வந்திருக்கோம்... ஒ
கொலைக் கேசில் உங்க மகன் தாமோதர் மே
சந்தேகம் எழுந்திருக்கு...''

திடுக்கிட்டுப் போன சிவகாமி அதிர்ச்
படிந்த குரலில் அலறினாள்.

''எ...என்ன சொல்றீங்க...''

அவளுடைய அதிர்ச்சிக் குரலைக் காதில்
வாங்கி மாடியிலிருந்த மருதாசலம் எட்டி
பார்த்தார்.

போலீஸ் உடைகளைப் பார்த்ததும் கீழே
இறங்கி வந்தார்.

அவரைப் பார்த்ததும் - குரல் நடுங்க
சொன்னாள்.

''எ...என்னங்க நம்ம தாமோதரை தேடிட்
வந்திருக்காங்க... கொலைக் கேஸ்... அ
இதுன்னு என்னென்னவோ சொல்றாங்க...''

மருதாசலம் மனசுக்குள் பிறந்
படபடப்பை வெளியே காட்டிக் கொள்ளாம
அவர்களைப் பார்த்தார்.

''உள்ளே வாங்க இன்ஸ்பெக்டர்..
உக்காருங்க...''

ஹாலுக்குள் அவர்களைக் கூட்டி
சென்றார்.

சோபாவைக் கை காட்டி விட்டு - எதி
அமர்ந்தார்.



''என்ன ப்ராப்ளம்...? கொஞ்சம் விளக்கமா சொல்றீங்களா...? நீங்க ஏதோ தப்பான தகவல்களின் அடிப்படையில் என் மகனைத் தேடி வந்திருக்கீங்கன்னு நினைக்கிறேன்...''

''நாங்க விளக்கமா சொல்றதுக்கு முன்னால உங்க சன் தாமோதர் வராங்கல் எதுக்காகப் போயிருக்கார்ன்னு எங்களுக்குத் தெரியணும்...''

மோனிஷாவின் விவகாரத்தைச் சுருக்கமாய் விவரித்த மருதாசலம் தொடர்ந்து சொன்னார்.

''மோனிஷாவைத் தேடறதுக்காக போலீஸோட உதவியைக் கேட்டிருந்தேன்... அவ ஆட்டோவில் போனதால் ஆட்டோ டிரைவர்சையெல்லாம் தரோவா விசாரிச்சுப் பார்த்தபோது அவ ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனதையும்... அங்கிருந்து வராங்கல்லுக்குப் போனதையும்...அங்கிருந்து வராங்கல்லுக்கு டிக்கட் வாங்கினதையும் கண்டுபிடிச்சிருக்காங்க... அந்தப் பொண்ணு மோனிஷா வராங்கல்லில் ஒரு சர்வீஸ் சொசைட்டியில் இருக்கறதா போலீஸ் கண்டுபிடிச்சு சொன்னாங்க... அவளைக் கூட்டிட்ட வர்றதுக்காகத்தான் தாமோதர் வாராங்கல் போயிருக்கான்...''

''மோனிஷா... வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணா...?''

''இல்லை இன்ஸ்பெக்டர்...''

மருதாசலம் மறுக்க - ப்ரேம்நாத்தும், திவாரியும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

''அப்படின்னா தாமோதரால அந்தப் பெண்ணுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட வாய்ப்பிருக்கு...''

சொன்ன ப்ரேம்நாத்தை அதிர்ச்சிப் பார்வையில் நனைத்தார் மருதாசலம்.

''தாமோதரனால மோனிஷாவுக்கு ஆபத்தா...? விட்டு விலகிப் போனவளைக் கூட்டிட்டு வரத்தான் அவன் போயிருக்கான் இன்ஸ்பெக்டர்...''

''ஏற்கெனவே தாமோதர் தான் காதலிச்ச ஒரு பெண்ணைக் கொலை செஞ்சிருக்கார்... கொலைக்குக் காரணம் பண விவகாரம்... வசதியில்லாத ஒரு பெண்ணை கல்யாணம் பண்ணிக்க அவர் விரும்ப மாட்டார்... இதில் என்னவோ சதி இருக்கு...''

திவாரி குறுக்கிட்டுக் கேட்டார்.

''அந்த ஆந்திரா சர்வீஸ் சொசைட்டியின் விலாசம் குடுங்க...''



12



வாரங்கல்.

ஆர்ச் மாதிரி வளைவான போர்டில் ஜிலேபி ஜிலேபியான தெலுங்கு எழுத்துக் களில் ஆந்திர சேவை மையம் என்று எழுதியிருந்தார்கள்.

ஆஸ்பிட்டல் இணைந்த சமூக நலக்கூடம்.

அதனுள்ளிருந்து வெளியே வந்தார்கள் மோனிஷாவும், சுபாவும்.

சாலையில் ஓரத்திலிருந்து ஆட்டோவைப் பிடித்தார்கள்.



கிக்கரை உதைத்து ஸ்டார்ட் செய்த டிரைவர் கேட்டார்.

''எங்கேம்மா போகணும்...?''

''ஹபிப் காம்ப்ளக்ஸ்...'' என்றாள் சுபா.

ஆட்டோ விரையத் தொடங்க - அவள் மோனிஷாவைப் பார்த்துச் சொன்னாள்.

''நீ வந்த நாளிலிருந்தே நான் கவனிச்சிட்டே இருந்தேன்... வாழ்க்கையைப் பறி கொடுத்த மாதிரி சோக மயமா இருந்தே...! இதுதான் உன் கவலைக்குக் காரணமா...?''

மோனிஷா தலையசைத்தாள்.

''நீ ஏன் வேற ஒரு அஸ்ட்ராலஜிஸ்ட் கிட்டே இதை வெரிஃபை பண்ணணும்னு நினைச்சுப் பார்க்கலை...?''

''அங்க்கிள் மருதாசலம் இந்திய அளவில் பிரபலமான ஜோதிடர்... அவர கால்குலேஷன் இம்மி பிசகாம கரெக்டா இருக்கும்... அவர் ப்ரிடிக்ஷன்ஸ் எல்லாமே தவறாம நடந்திருக்கு... அவரே சொன்னதுக்கு பிறகு அதுக்கு மேல என்ன வேணும்...?''

''ஆனைக்கும் அடி சறுக்கும்னு நீ கேள்விப்பட்டதில்லையா...? அதைத் தவிர உன்னைத் தவிர்க்கணும்னு திட்டமிட்டே அவர் பொய் சொல்லியிருக்கலாம் இல்லையா...?'

''சுபா...''

''ஏண்டி கத்தறே...''

''அவங்க அப்படிப்பட்டவங்க இல்லை...! அங்க்கிள்... அத்தை...தாமோதர்... மூணு பேருமே ஜெம்ஸ்...''

''அந்த ஜெம்மோட தராதரத்தை தேய்ச்சிப் பார்த்துடலாம்...''

ஹபிப் காம்ப்ளக்ஸைத் தொட்டதும் ஆட்டோ தன் வறட்டுக் கத்தலை நிறுத்திக் கொண்டது.

காசைக் கொடுத்துவிட்டு அந்த பிரமாண்டமான கட்டிடத்தின் நுழைவாயிலில் பிரவேசித்தார்கள்.

அங்கே பேனர் அசைந்து கொண் டிருந்தது.

அஸ்ட்ராலஜிஸ்ட் சேதுராம் என்று ப்ளோரஸண்ட் எழுத்துக்கள்.

பெஞ்ச்சில் உட்கார்ந்திருந்த பொடியன் இவர்களைப் பார்த்ததும் கேட்டான்.

''அப்பாயிண்ட்மென்ட் வாங்கியிருக்கீங் களா...?''

''மோனிஷா... சுபா...ன்னு போட்டிருக்கும் பாரு...''

தன் கையிலிருந்த சார்ட்டில் பார்த்து பென்சிலால் டிக் செய்த பொடியன் அவர்களைக் காத்திருக்கச் சொன்னான்.

அறைக்குள் இருந்தவர்கள் சொற்ப நேரத்தில் வெளியே வரவும், மோனிஷாவும், சுபாவும் உள்ளே சென்றார்கள்.

இருவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள - பைஜாமாவில் இருந்த சேதுராம் புன்னகைத்தார்.

''நீங்க ஃபேக்ஸ் பண்ணினி ஹாராஸ்கோப் கிடைச்சது...''

சுபா சொன்னாள்.



''என் ப்ரெண்ட் மோனிஷாவோட ஜாதகம்தான் அது...''

''குறிப்பா ஆயுள் பலம் பத்தி பார்க்க சொல்லிக் கேட்டிருந்தீங்க...''

''ஆமா ஸார்...''

''இந்த ஜாதகருக்கு ஆயுள் பலம் படு கெட்டியா இருக்கு...''

அவர் சொல்ல - திகைப்போடு நிமிர்ந்தாள் மோனிஷா.

''நல்லாப் பார்த்திங்களா...?''

''அதிலென்னம்மா சந்தேகம்...?''

''வேற ஒரு ஜோதிடர் பார்த்துட்டு நான் இன்னும் மூணு மாசம்தான் உயிரோட இருப்பேன்னு அடிச்சு சொல்லிட்டாரே...?''

''யாராவது அரை குறை ஜோசியரா இருக்கும்... இந்த ஜாதகத்தைப் பார்த்து ஓரளவுக்கு ஜோதிடம் தெரிஞ்ச யாருமே அப்படிச் சொல்ல வாய்ப்பே இல்லை...''

சேதுராமன் தீர்க்கமாய்ச் சொல்ல - சிறிது நேரத்தில் விடைபெற்று வெளியே வந்தார்கள்.

''சுபா எனக்கு ஆயுள் கெட்டின்னு அடிச்சு சொல்றார்... அங்கிள் ஏன் அப்படி சொன்னார்...''

''பணக்காரங்க பணக்காரப் புத்தியைக் காட்டிட்டாங்க... அவ்வளவுதான் நான் சொல்லுவேன்... நேரடியா காதலை எதிர்த்தா நீங்க ரெண்டு பேருமே போர்க்கொடி தூக்குவீங்க... அதனால சாதுர்யமா உங்களைப் பிரிச்சிருக்கார் அவர்...''

''சே... தேன் ஒழுகிற மாதிரி பேசின அவர் இவ்வளவு தந்திரமா நடந்துக்குவார்ன்னு நான் நினைச்சே பார்க்கலை... தாமோதர் பாவம்... சொல்லாம கொள்ளாம கிளம்பி வந்துட்ட என்னை நினைச்சு உருகிட்டிருப்பார்...''

''நீ உடனடியா உன்னோட லவ்வர் தாமோதர்கிட்டே இந்த விஷயத்தைப் பத்தி விளக்கமா சொல்லிடு... தன்னோட அப்பாவின் வில்லத்தனத்தை அவர் தெரிஞ்சிக்க வேண்டியது அவசியம்...''

''ரூமுக்குப் போனதும் முதல் காரியமா அவருக்கு போன் பண்ணிப் பேசப் போறேன்.''

சுபா விடைபெற்றுக் கொண்டு தன்னுடைய ஹாஸ்பிடலுக்கு ஆட்டோ பிடிக்க - மோனிஷா இன்னொரு ஆட்டோவை அமர்த்தினாள்.

பாபா ஸ்ட்ரீட்டின் கோடியில் இருந்த அந்த சிறிய வீட்டை தொட்டபோது லேசாக இருட்டியிருந்தது.

ஆட்டோவை அனுப்பிவிட்டு காம் பவுண்ட் கதவை விரித்தாள்.

முகப்புக் கதவை நெருங்கியபோது அங்கே ஒரு உருவம் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து திகைப்பில் விழுந்தாள்.

''யாரது...?''

''யாருன்னு கண்டுபிடி பார்க்கலாம்...?''

குரலைக் கேட்டு அவள் திகைப்பு இன்னும் எகிறியது...

இது தாமோதரின் குரல் அல்லவா...?

மசமச இருட்டில் நின்றிருந்தவனை உற்றுப் பார்த்தபடி திணறலாய் கேட்டாள்.

''த...த...தாமோதர்...''



''பத்தே நாளில் என்னை உனக்கு அடையாளம் தெரியாம போயிடுச்சா...?''

''நீ... நீங்க எப்படி இங்கே...?''

''போலீஸ்ல ரிப்போர்ட் பண்ணி உன்னைத் தேடும் படலத்தை ஆரம்பிச்சோம்... அவங்க உன்னோட அட்ரசைக் கண்டுபிடிச்சு எங்களுக்குத் தகவல் தந்தாங்க... உடனே நான் கிளம்பி இங்கே வந்தேன்...''

மோனிஷா பரபரப்பாய் பூட்டைத் திறந்து கதவுத் தாளை விலக்கினாள்.

''உள்ளே வாங்க தாமோதர்... நானே உங்களை இப்போ போனில் பிடிக்கணும்ன்னு நினைச்சிட்டிருந்தேன்...''

''ஆச்சர்யமா இருக்கே...? நீங்க நிம்மதியா வாழுங்க... என்னை மறந்துடுங்கன்னு லெட்டர் எழுதி வெச்சிட்டு திடீர்ன்னு கிளம்பி வந்த நீ என்னை போனில் பிடிக்கணும்ன்னு நினைச்சியா...?''

''ஆமா தாமோதர்... இன்னும் மூணு மாசம்தான் நான் உயிர் வாழப் போறேன்னு உங்கப்பா சொன்னதை நம்பிட்டு... என்னால உங்க வாழ்க்கை பாழாக வேண்டாம்ன்னு நான் சொல்லாம கொள்ளாம ஓடி வந்தேன்... ஆனா உங்கப்பா நம்மைப் பிரிக்கறதுக்காக அப்படிப் பொய் சொல்லியிருக்கார்ன்னு எனக்கு இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னாலதான் தெரிஞ்சது...''

புருவங்களை சுருக்கிக் கொண்டு நிமிர்ந்தான் தாமோதர்.

''என்ன சொல்றே...?''

''உங்கப்பாவின் ப்ரிடிக்‌ஷனை கிராஸ் செக் பண்ணலாம்ன்னு இங்கே எனக்குக்

கிடைச்ச சுபாங்கற ப்ரெண்ட் யோசனை சொன்னா... அவ சொன்ன யோசனைப்படி இந்த ஊரில் பிரபலமாயிருக்கிற ஒரு அஸ்ட்ராலஜிஸ்ட்டுக்கு என்னோட ஹாராஸ் கோப்பை ஃபேக்ஸ் பண்ணிட்டு இன்னிக்கு அவரைப் போய் சந்திச்சோம்... உங்கப்பா வோட சாயம் அப்போது தான் வெளுத்தது..."

தாமோதர் பல்வரிசை பளீரிடப் புன்னகைத்தான்.

"அவரைச் சொல்லி குத்தமில்லை மோனிஷா... அவர் கரெக்டாத்தான் ப்ரிடிக்ஷன் பண்ணியிருக்கார். சில தசா புத்திகளையும்... ராசிநாதன்களையும் மாத்தி அமைச்சு உன்னோட ஜாதகத்தைத் திருத்தி அவர்கிட்டே கொடுத்தது நான்தான்..."

"எ...என்னங்க சொல்றீங்க...? ஏன் அப்படி செஞ்சீங்க...?"

"சின்ன வயசிலிருந்தே அவர் கூடவே இருக்கிறதாலயும்... அவர்கிட்டே இருக்கும் புத்தகங்களைப் படிச்சதாலேயும் எனக்கும் அஸ்ட்ராலஜியில் ஓரளவு எக்ஸ்பர்டைஸ் இருக்கு... இந்த நாலெட்ஜை உபயோகிச்சு உனக்கு அல்பாயுசுன்னு அவர் சொல்ற மாதிரி கட்டங்களை மாத்தி அமைச்சுட்டு திருத்தின ஜாதகத்தை அவர் கிட்டே கொடுத்தேன். பாவம் அப்பா திருத்தப்பட்ட ஜாதகத்தைப் பார்த்துட்டு அப்படிச் சொன்னார்..."

"ஏன் அப்படி செஞ்சீங்க...?"

"உன்னை என் கிட்டே இருந்து அப்புறப்படுத்தணும்... அதுக்காகத்தான்..."

திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள் மோனிஷா.



"தாமோதர்...? என் மேல உயிரையே வெச்சிருக்கேன்னு நீங்க சொன்னதெல்லாம்...?"

"நான் உயிரையே வெச்சிருந்தது அழகான உன் உடம்பு மேல...! ஆனா நீ அதை இழுத்து இழுத்துப் போர்த்திக்கிட்டு என்னை நெருங்கவே விடலை... வேற வழி... பாலிஷா உன்னை கட் பண்ணிடத் தீர்மானிச்சேன். அதுக்கான முதல் முயற்சியா திடீர்ன்னு என்னோட அம்மா அப்பாகிட்டே உன்னைக் கூட்டிட்டு போய் அறிமுகப்படுத்தி னேன்... அவங்க என்னை ஏத்துக்க மாட்டாங்கன்னு நினைச்சேன்... ஆனா நான் நினைச்சதுக்கு மாறா அவங்க என் விருப்பத்தை அக்செப்ட் பண்ணிகிட்டாங்க... நான் மனசுக்குள்ளே குழப்பமா போராட்டம் நடத்திட்டிருந்தப்போ நீயா ஜாதக விஷயத்தை எடுத்தே... என் கிட்டே உன்னோட ஹாரஸ்கோப்பைக் குடுத்து விடச் சொல்லி அப்பா சொன்னப்பவே என் மனசுக்குள்ளே திட்டம் உருவாயிடுச்சு... உனக்கு நிறைய கண்டங்கள் இருக்கு... அல்பாயுசுன்னு சொன்னது சொன்னபடி நடக்கும் பிரபல அஸ்ட்ராலஜிஸ்ட்டான என்னோட அப்பா மூலமா சொல்ல வெச்சு... அதுக்கப்புறம் உன்னை சமயம் பார்த்து யாருக்கும் சந்தேகம் வராம தீர்த்துக் கட்டிட முடிவு பண்ணினேன்..."

"த...தாமோதர்... என்னைக் கொலை பண்ண நீங்க திட்டம் போட்டிங்களா...?"

"என்ன ஆச்சர்யமாயிட்டியா... இல்லை அதிர்ச்சி ஆயிட்டியா...? நான் இதுவரைக்கும் தொட்ட பெண்கள் எட்டு... சத்தமில்லாம ஒதுங்கிட்டா விட்டுடுவேன்... முரண்டு பிடிக்கற ரகமா இருந்தா தீர்த்துக் கட்டக்கூடத் தயங்க மாட்டேன்... ஒரு சொத்து

விவகாரத்தில் என்னை நம்ப வெச்சுக் கழுத்தறுத்த ஜோதிங்கற பொண்ணை போன வாரம்தான் தீர்த்துக் கட்டி துவம்சம் பண்ணினேன்.... கொலை செஞ்சது... யாருன்னு தெரியாம போலீஸ் திணறிட்டிருக் காங்க... இதையெல்லாம் நான் ஏன் சொல்லிட்டிருக்கேன்னு நினைக்கிறியா...? இப்போ இந்த வீட்டில் வெச்சு தான் உன்னைத் தீர்த்துக் கட்டப் போறேன்..."

"தாமோதர் வேண்டாம்... பல நாள் திருடன் ஒரு நாள் பிடிபடுவான்..."

"இந்த திருடன் என்னிக்குமே பிடிபட மாட்டான்... இப்போ கூட நான் கொச்சின் இந்தூர் எக்ஸ்பிரஸில் வராங்கல் நோக்கி வந்துட்டிருக்கேன்... அப்படித்தான் ரெக்கார்டு என்கிட்டே இருக்கு... அந்த ட்ரெயின் ஆந்திரா பார்டரை தொட்டதும் நான் ஒரு சின்ன ஸ்டேஷனில் ட்ரெயினை விட்டு இறங்கி வந்துட்டேன்... டாக்சி பிடிச்சி இப்போ இங்கே வந்து சேர்ந்திருக்கேன். இன்னிக்கு ராத்திரி பத்து மணிக்குத்தான் ட்ரெயின் வராங் கல்லுக்கு வந்து சேரும்... இப்போ உன்னைத் தீர்த்துக் கட்டிட்டு நான் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போயிடுவேன்... ராத்திரி அந்த ட்ரெயின் வந்து சேர்ந்ததும்... அந்தப் பயணிகளோட ஒண்ணா ஸ்டேஷனை விட்டு வெளியேறி மறுபடியும் புதுசா வர்ற மாதிரி இந்த இடத்துக்கு ஆட்டோ பிடிச்சு வருவேன்... ஆட்டோ டிரைவரை லக்கேஜை எடுத்துக் கிட்டு வீட்டுக்குள் வரச் சொல்லுவேன்... உள்ளே நீ கொலையாகி கிடப்பே... நான் கூச்சல் போடுவேன். நான் அப்போதுதான் ட்ரெயினிலிருந்து வந்தேங்கறதுக்கு ட்ரெயின் ரிசர்வேஷன் டிக்கெட்டும் ஆட்டோ டிரைவரும் சாட்சி... அப்பாவோட ஜோதி



கண்டத்தின்படி நீ இறந்துட்டே.... எனக்கும் இந்தக் கொலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை... இப்படித்தான் எல்லாரும் முடிவு செய்வாங்க..."

மோனிஷாவின் விழிகளுக்குள் பயம் ஊதுபத்திப் புகை மாதிரி பரவ ஆரம்பித்தது.

கண்கள் அலை பாய்ந்தன. கண்கள் துருதுருத்தன.

சட்டென்று அடியெடுத்து வைத்து கதவை நோக்கி ஓட முற்பட்டாள். அந்தச் சின்ன வீட்டின் குறைவான நீள அகலம் தாமோதருக்கு சாதகமாய் இருந்தது.

இரண்டே எட்டில் அவளைப் பிடித்து விட்டான்.

அவனின் முரட்டுப் பிடியில் மோனிஷாவின் மெல்லிய நரம்புகள் பிசகிக் கொள்ள வலியில் துடித்தாள்.

இறுகிய முகத்துக்கு மாறியிருந்தாள்.

க்ளவுஸ் மாட்டியிருந்த கைகளில் ஒன்றை அவள் கழுத்துக்குக் கொண்டு சென்றான். அலற முற்பட்டவளின் வாயை இன்னொரு கையால் அழுத்தினான்.

கழுத்தில் அவன் பிடி இறுகிக் கொண்டிருக்க மோனிஷாவுக்குள் பொறி கலங்கியது. மூச்சுக் குழாய் காற்றுக்கு ஏங்க - கண்கள் மேலே சொருகிக் கொள்ள ஆரம்பித்தன.

தாமோதரின் பிடி மேலும் மேலும் இறுகிக் கொண்டே வந்த அந்த விநாடி - கப்கப்பென்று பூட்ஸ் ஒலிகள்.

அவன் முதுகின் மேல் அழுத்தமாய் சில இரும்புக் கைகள் விழுந்தன.

முடியைக் கொத்தாய் பற்றி யாரோ பின்னால் இழுத்தார்கள்.

தாமோதர் திடுக்கிட்டுத் திரும்ப -

ப்ரேம்நாத்தும், திவாரியும் ஆந்திர போலீஸ் பட்டாளத்தோடு அவனைச் சுற்றி வளைத்து நின்றிருந்தார்கள்.

மோனிஷாவை அவனிடமிருந்து விலக்கி தண்ணீர் தெளித்து முதலுதவி செய்தார் திவாரி.

ப்ரேம்நாத் இறுகிய குரலில் தாமோதரைப் பார்த்து வார்த்தைகளை வெளியிட ஆரம்பித்தார்.

''தாமோதர் ஜோதி கொலை முதற் கொண்டு உன்னோட காதல் லீலைகள் எல்லாத்தையுமே நாங்க கண்டுபிடிச்சுட் டோம். நீ மோனிஷாவைப் பார்க்க வர்றேன்னு தெரிஞ்சதுமே உஷாராயிட்டோம். க்ரிமினல் மைண்டோட ஏதாவது செய்வேன்னு ஊகிச்சு நாங்க ஃப்ளைட் பிடிச்சு இங்கே வந்து சேர்ந்தோம்...''

அவன் பேசத் திராணி இல்லாமல் போலீசின் பிடியில் நின்றிருந்தான்.

**கா**ர் ஹார்ன் சத்தம் கேட்டு ஹரிண வெளியே எட்டிப் பார்த்தாள்.

மருதாசலமும், சிவகாமியும் வந் கொண்டிருப்பதைப் பார்த்ததும் திகைப்பு பரபரப்புமாய் மோனிஷாவைக் கூப்பிட்டாள்.

முன்னறைக்கு வந்த மோனிஷா அவர்க இருவரையும் பார்த்ததும் - திகைப்பி நனைந்தபடி வரவேற்றாள்.

''வ...வாங்க அங்க்கிள்... வாங் அத்தே...''

மடக்கு நாற்காலிகளை விரித்து போட்டாள்.

''உக்காருங்க... தாமோதரைப் போய் பார்த்திங்களா...? அவர் எப்படி இருக்கார்...?



''தாமோதரா...? யார் அது...?''

மருதாசலம் திருப்பிக் கேட்க - அவள் திகைப்பின் சதவீதம் அதிகரிக்க அவரைப் பார்த்தாள்.

''அ...அங்கிள்... என்ன சொல்றீங்க...''

''ஆமாம்மா... அவனுக்குப் பின்னால இப்படி ஒரு நிழல் இருக்கும்ன்னு நாங்க கனவிலும் நினைக்கலை... அவன் கேட்டதை யெல்லாம் கொடுத்தோம்...அவனோட நியாமான விருப்பங்கள் எதையும் நாங்க தட்டிக் கழிக்கவே இல்லை... அதனாலதான் வசதியில் குறைஞ்ச பொண்ணா இருந்தாலும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு அவன் சொன்னப்ப சந்தோஷ்மா தலையாட்டி னோம். ஆனா இவ்வளவு பெரிய பெண் பித்தனாவும்... அயோக்கியனாகவும் இருக்கற ஒருத்தன் எங்க மகனா இருக்கவே வாய்ப் பில்லை... அவனை நாங்க முழுசா தலை முழுகிட்டோம்... ஆனா எங்க வீடு வெறுமையா இருக்கு... அந்த இடத்தை நிரப்பறதுக்கு நீ வேணும்...''

மோனிஷா திகைப்பின் உச்சத்துக்குப் போய் அவர்களைப் பார்த்தாள்.

சிவகாமி ஆமோதித்தாள்.

''ஆமா மோனிஷா... எங்க மகளா அடாப்ட் பண்ணிக்கணும்ன்னு ரெண்டு பேருமே முடிவு பண்ணியிருக்கோம். உன்னோட சம்மதத்தைத் தெரிஞ்சிக்கணும்ன்னுதான் இங்கே வந்திருக் காம்... உனக்கு சம்மதம்தானே...''

அவர்கள் தந்த சந்தோஷ அதிர்ச்சியில் வார்த்தைகளைப் பேச முடியாமல் கண்ணீரில் நனைந்த விழிகளோடு நின்று கொண்டிருந் தாள் மோனிஷா.

*(முடிந்தது)*